விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 23 ஞாயிற்றுக்கிழமை (06.06.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 169

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

## பிரி.பாதுகாப்புச் செயலாளருடன் அமைச்சர் பீரிஸ் விரிவான பேச்சு

(கொழும்பு)

இலங்கை விவகாரம் தொடர்பில் பிரித்தானிய பாதுகாப்புச் செயலாளர் லியாம் பொக்ஸிற்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

சிங்கப்பூரில் தற்போது நடைபெற்று வரும் சங்கா... டயலொக் மாநாட்டில் இந்தப் பேச்சுவா... நடைபெற்றுள்ளது. பிரித்தானிய அரசாங்கத்துடன் இலங்கை நடத்திய முதலாவது உயர் மட்டப் பேச்சுவார்த்தையாக இது கருதப்படுகின்றது.

அரசியல் சூழ்நிலை மற்றும் பொருளாதார நிலைமைகள் குறித்து இந்தச் சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அகதிகள் மீள்குடியேற்றம், அவசர காலச் சட்டத் தளர்வு, உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு நியமனம், அரசியல் சாசனத் திருத்தம் போன்ற விடயங்கள் குறித்து வெளிவிவகார அமைச்சர் *(20 ஆம் பக்கம் பார்க்க)*

## இந்தியாவின் யோசனைக்கு ஏற்ப செயற்பட இலங்கை அரசு இணக்கம்

(கொழும்பு)

இந்தியாவுக்குத் தேவையான வகையில் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பான யோசனைகள் உள்ளிட்ட அரசியல் சாசனத் திருத்தத்தை விரைவில் அமுல்படுத்துவது, சீபா உடன்படிக்கை தொடர்பில் இந்திய அரசாங்கத்தின் பொருளாதார நிபந்தனைகளை அப்படியே ஏற்றுக் கொள்வது என அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக லங்கா இரிதா பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அதிகாரப் பகிர்வு தொடர்பான பேச்சுவார்த்தை ஒன்றைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோருக்கிடையில் அண்மையில் நடைபெற்றுள்ளதுடன் அந்தப் பேச்சுவார்த்தை தொடர்பாக எவ்வித தகவல்களும் ஊடகங்களுக்குத் தெரியப்படுத்தப் *(20 ஆம் பக்கம் பார்க்க)*

# இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஜனாதிபதியிடம் வலியுறுத்துவோம்

## நாளைய பேச்சுக் குறித்து சம்பந்தன் விளக்கம்



(கொழும்பு)

தமிழ் மக்கள் அன்றாடம் சந்திக்கும் பிரச்சினைகள் பற்றியும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்தும் ஜனாதிபதியிடம் தாம் வலியுறுத்தப் போவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மகிந்தவுடனான சந்திப்புக் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார். *(02 ஆம் பக்கம் பார்க்க)*

## வடக்கு மாகாண செயலணிக் குழு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய பணிகளை ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் விசேட செயலணிக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்கு அபிவிருத்தி நடவடிக்கை தொடர்பான விசேட செயலணி என பெயரிடப்பட்டுள்ள இந்தக் குழுவுக்கு பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களின் மீன்பிடி, சுற்றுலா, விவசாயம் உள்ளிட்ட அனைத்துத் துறைகள் *(02 ஆம் பக்கம் பார்க்க)*

## முதலமைச்சர் பிள்ளையான் இந்தியா செல்வார்?

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான குழு ஒன்று இன்று இந்தியா செல்லவுள்ளது.

இக் குழுவில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களும் உள்ளடங்குகின்றனர். சிறுபான்மைக் கட்சியினருடன் இந்தியா பேச விருப்பம் கொண்டுள்ள நிலையில் முதலமைச்சரின் இவ் விஜயம் முதன்மை பெறுவதாகக் கூறப்பட்டது.

இதேவேளை இந்தியாவுக்குச் செல்லும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து இந்திய அரசியல் தலைவர்களைக் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் சந்தித்துக் கலந்துரையாடுவார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்க இந்திய அரசு நேரடித் தலையீடு!

### அரசு மந்தகதியில் செயற்படுவதாகக் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்க இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் மந்த நிலையில் இயங்குகின்றமையை அடுத்து இந்திய அரசாங்கம் நேரடியாக இதில் தலையிடவிருப்பதாக த ஏசியன் ரிபியூன் செய்தி வெளியிட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இலங்கையின் சிறுபான்மைக் கட்சிகளுக்கு இந்திய மத்திய அரசாங்கம் நேரடியாக அழைப்பு விடுத்து பேச்சுவார்த்தை நடத்தும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதனை இந்திய மத்திய அரசாங்கத்தின் உயர் மட்டத் தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

யுத்தம் நிறைவடைந்து ஒரு வருட காலம் நிறைவடைந்த நிலையிலும் தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்க அரசாங்கம் தாமதப்படுத்துவதனாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இதன்படி இலங்கை சிறுபான்மைக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அதன் அடிப்படையிலான தீர்வுத் திட்டம் ஒன்று இந்தியாவினால் தயாரிக்கப்பட்டு இலங்கையிடம் சமர்ப்பிக்கப்படும்.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் எட்டாம் திகதி இந்தியாவுக்கான விஜயத்தை *(20 ஆம் பக்கம் பார்க்க)*

## ஹெல உறுமயவின் ஆலோசனை கூட்டமைப்புக்குத் தேவையில்லை

### அரியநேத்திரன் எம்.பி. பதிலடி

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆலோசனையோ, அச்சுறுத்தலோ வழங்கும் அருகதை ஜாதிக ஹெலஉறுமயவுக்குக் கிடையாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், அவர்களின் இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமானால் அரசுடனான பேச்சுக்களில் பிரிவினைவாதத்தை முன்வைக்கக் கூடாது என ஹெல உறுமய எச்சரிக்கை விடுத்தது.

ஹெல உறுமயக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் இந்த எச்சரிக்கையை விடுத்திருந்தார். அதற்குப் பதிலளித்த அரியநேத்திரன் எம்.பி. இதனைத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு *(20 ஆம் பக்கம் பார்க்க)*

## வடக்கு மக்களின் அவல நிலைக்கு கூட்டமைப்பும் பொறுப்பாளிகள்

### பிரதி அமைச்சர் முரளிதரன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கு மக்களின் அவல நிலைமைகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கட்சியும் முக்கிய பொறுப்பாளி என மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தை நிறுத்த வேண்டுமெனக் கோரி தாம் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து வெளியேறிய போதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யுத்தத்தை முன்னெடுப்பதற்குப் புலிகளுக்கு ஊக்கமளித்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வன்னி மக்களின் நிலைமைகள் திருப்தி அடையக் கூடிய வகையில் இல்லை என்பது உண்மை என்ற போதிலும் குறைகளை மட்டும் கண்டு பிடிப்பதில் அர்த்தமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குற்றம் கண்டு *(20 ஆம் பக்கம் பார்க்க)*

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வெசாக் பண்டிகை தினத்தன்று 27ஆயிரம் சிங்கள மக்கள் நயினாதீவுக்குச் சென்றனர்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் இம் முறை கொண்டாடப்பட்ட வெசாக் பண்டிகை நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த தென்னிலங்கைச் சிங்கள மக்களில் ஏறக்குறைய 27ஆயிரம் பேர் புத்த பெருமானை தரிசிப்பதற்காக நயினாதீவு நாகவிகாரைக்குச் சென்று திரும்பியதாக கூறப்படுகின்றது.

வேலணை பிரதேச சபை மேற்படி மக்களுக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுத்ததாக பிரதேச சபை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக மலசலகூட வசதி, குடிநீர் வசதி, வாகனத்தரிப்பிடம் வசதி போன்ற சேவைகளையும் ஏற்படுத்திக்கொடுத்துள்ளனர்.

மேலும் புங்குடுதீவுக் கடற்படையினரும் குறிகாட்டுவான் பொலிஸாரும் இணைந்து இவர் களுக்கான போக்குவரத்து உதவிகளை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வடபகுதியில் இடம்பெற்ற யுத்தம் முடிவுக் கொண்டுவரப்பட்டதை தொடர்ந்து யாழ். மாவட்டத்தில் என்றுமில்லாத வகையில் வெசாக் பண்டிகைகள் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## மாட்டுவண்டிச் சவாரி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை விவசாயிகளின் ஏற்பாட்டில் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கொத்துத்தறை சவாரித் திடலில் நடைபெறவுள்ளது. (ச-9)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலகத்தில் நாளை நடைபெற விருந்த யாழ்ப்பாண, கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

எனினும் இக் கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என யாழ். அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

இதேவேளை யாழ். மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு கூட்டம் முன்னர் அறிவிக்கப்பட்டபடி நாளை காலை9.00மணிக்குஅரசஅதிபர்தலைமையில் இடம்பெறும் என்றும் இதில் அனைத்து திணைக்களத்தலைவர்களையும் கலந்து கொள்ளுமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். (ச-9)

## இனைப்பிரச்...

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாளை திங்கட்கிழமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேசவுள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு பிறகு முதல் முறையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஜனாதிபதி மேற்கொள்ளவிருக்கும் சந்திப்பு இதுவாகும்.

இலங்கை ஜனாதிபதி இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில் இந்தச் சந்திப்பு நடக்கிறது. நாளைய சந்திப்பு குறித்து சம்பந்தன் தெரிவித்ததாவது, நாளைய சந்திப்பில் தமிழ் மக்களின் உடனடி தேவைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

வன்னி பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களின் உடனடித் தேவைகள் பற்றி முதலில் ஜனாதிபதியுடன் பேசவுள்ளோம். அம் மக்கள் அடிப்படை வாழ்வாதார உதவிகள் இன்றி மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் வாழ்வாதாரத்தை முன்னெடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு உடனடியாக செய்தாக வேண்டுமென வலியுறுத்தவுள்ளோம்.

மற்றும் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு குறித்து பேசவுள்ளோம் என்று கூறினார்.

வன்னியில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட 25 கிராமங்களுக்குச் சென்று மக்களுடன் கலந்துரையாடினோம். இது சம்பந் தமான அறிக்கை ஒன்றினை தயாரித்துள் ளோம். அடுத்த வாரமளவில் அதனை வெளியிடவுள்ளோம். அதற்கு முன்பாக ஜனாதி பதியிடம் கையளித்து அது தொடர்பில் பேசவுள்ளோம். அத்துடன் மெனிக்பாம் முகாமுக்கு கூட்டமைப்பு செல்லவிடாது தடுக்கப் பட்டது தொடர்பில் கலந்துரையாடவுள்ளோம்.

ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னர் தமிழ் மக்களுடைய நிலைவரங்களில் மாற்றம் ஏற்பட சந்தர்ப்பம் உண்டா எனக் கேட்கப்பட்டபோது, அது பற்றி தற்போது எதுவும் கூற முடியாது என அவர் மறுத்துவிட்டார். இதேவேளை ஜனாதிபதியுடன் நாளை இடம்பெறும் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக யார் பங்குபற்றுவது என்ற தீர்மானம் இன்று எடுக்கப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். (ச-5,9)

# உணர்வுபூர்வமான செயற்பாடு மூலமே டெங்கு நோயைக் கட்டுப்படுத்தமுடியும்

விழிப்புணர்வுடன் கூடிய உணர்வுபூர்வமான செயற்பாடுகள் மூலமே டெங்கு நோயை கட்டுப்படுத்தமுடியுமெனபாரம்பரியக்கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற யாழ்.மா வட்டத்தில் டெங்குநோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் அங்கு ரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் டெங்கு நோயின் தாக்கம் தொடர்பாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் தெளிவாகப் புள்ளிவிபரங்களுடன் விளக்கியுள்ளார்.

எனவே நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் பொறுப்பானவர்கள் கடமையாக மட்டுமன்றி பொறுப்பாக உணர்ந்து கூடிய கவனமெடுத்து செய்படவேண்டும். அப்போது தான் நோய்க்கட்டுப்பாடு நடவடிக்கைகள் முழுமையடையும் என்றும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி மிகுந்த அக்கறையும் கரிசனையும் கொண்டிருக்கிறார் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டினார்.

அத்துடன் இனிமேலும் நடைபெறவுள்ள ஒருங்கிணைப்பு குழுக்கூட்டங்களிலும் அனைவரும் பங்கெடுத்து யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயை முற்றாக ஒழிக்க ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் தனது ஆரம்ப உரையில்,

யாழ்.மாவட்டத்தில் மலேரியாவை ஒழிக்க எவ்வாறு ஒன்றுபட உழைத்தோமோ அதே போன்று டெங்குநோயையும் தடுக்க அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் மருத்துவத்துறை சார்ந்தோர், கல்வி சமூகத்தினர், பாடசாலைச் சமூகத்தினர், சமூகப் பெரியார்கள், வர்த்தகர்கள், சுகாதார தொண்டர்கள் உள்ளிட்ட பெருமளவானோர் கலந்து கொண்டனர். (ச-5)

## வடக்கு...

குறித்தும் ஆராய்ந்து மாதத்திற்கு ஒரு முறை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே தெரிவித்துள்ளார். (ச-5)

## முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுப்போட்டி ஆரம்பம்

(வேலணை)

முல்லைத்தீவு மாவட்ட கல்வி வலயங்களுக்கான விளையாட்டுப்போட்டி நேற்று வவுனியா காமினி மகாவித்தியாலய விளையாட்டுத்திடலில் ஆரம்பமானது.

இவ் விளையாட்டு நிகழ்வு இன்றும் நாளையும் தொடர்ந்து நடைபெறவுள்ளது. இவ் விளையாட்டு நிகழ்வில் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலைகள் மற்றும் துணுக்காய் கல்வி வலயத்துக்குரிய பத்து பாடசாலைகளும் பங்குபற்றின.

இவற்றுடன் வவுனியா செட்டிக்குளம் நலன்புரி முகாமைச் சேர்ந்த (ஆனந்த குமார சாமி இராமநாதன் 5 நலன்புரி முகாம்) முல்லைத்தீவு மாவட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

செட்டிக்குளம் நலன்புரி முகாமிலுள்ள மாணவர்களின் நலன் கருதியே இவ்விளையாட்டு நிகழ்வு காமினி மகா வித்தியாலய விளையாட்டுத்திடலில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

## இருபது-20 கிரிக்கெட் போட்டி

(கரவெட்டி)

மாலு சந்தி மைக்கெல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவை முன் னிட்டு வடமராட்சி விளையாட்டுக்கழகங்களுக்கிடையே நடைபெற்று வரும் இருபது-20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இரண்டாம் சுற்றுப்போட்டியில் இன்று காலை 8 மணிக்கு இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர் மலை யங்கம்ன்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

நேற்று நடைபெற்ற இரண்டாம் சுற்றுப் போட்டியின் மீள் போட்டியான 11.30 மணிக்கு உடுப்பிட்டி நவஜீவன்ஸ், தும்பளை நாவலர் வி.கழகம் மோதவுள்ளது. பிற்பகல் 3 மணிக்கு குரும்பசிட்டி உதய சூரியனை எதிர்த்து வல்வெட்டி ஒற்றுமை விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (ச-3,24)

## ஒன்று கூடல் நிகழ்வு

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய உயர்தர மாணவர் மன்றத்தின் ஒன்று கூடலும் மதிய போசனமும் எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

செல்வன் சு.கருணாகரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியல்துறைத் தலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி கலந்து கொள்கிறார். (ச)

## இரத்ததான நிகழ்வு

வட்டுக்கோட்டை தெற்கு தெக்கணப்பாய் கண்ணகாம்பிகை ஆலய திருவிழாவை முன்னிட்டு அப்பகுதி இளைஞர்களின் ஏற்பாட்டில் இன்று காலை 9 மணிக்கு இரத்ததான நிகழ்வு இடம் பெறவுள்ளது. மூளாய் வீதியில் மாவடிச்சந்திக்கு அருகாமையிலுள்ள இடத்தில் நடைபெறும் இவ் இரத்ததான நிகழ்வில்கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ச)


உங்களை உணருங்கள் "ஜெய்குருதேவ்" அன்பில் மலருங்கள்



ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின் வாழும் கலை பயிற்சி

THE ART OF LIVING

உலகில் 182 நாடுகளுக்கு மேல் வெற்றிகரமாக பயிற்றப்படும் வாழும் கலைப்பயிற்சி மீண்டும் நமது இடத்தில் ஆரம்பமாகிறது.

- சுதர்சனக்கிரியா, மூச்சுப்பயிற்சி, தியானம், எளிய யோகா ஆகியவை உள்ளடக்கிய அற்புதமான பயிற்சி
- ஞாபகசக்தி அதிகரிக்க
- நிகழ்காலத்தில் வாழ
- மனதை ஒரு நிலைப்படுத்த
- வேலைகளில் முழுக்கவனம் செலுத்த
- ஆஸ்மா, இரத்தக்கொதிப்பு, நீரிழிவு நோய்களில் இருந்து விடுபட

இதில் கலந்து கொண்டு பயன்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அறிமுக உரை

இடம்: கம்பன் கோட்டம்-நல்லூர்.
காலம்: 07.06.2010 (திங்கட்கிழமை)
நேரம்: மாலை 5.00 மணிக்கு

பயிற்சி நாட்கள்: 08.06.2010 (செவ்வாய்க்கிழமை) முதல் 13.06.2010 (ஞாயிற்றுக்கிழமை) வரை

குறிப்பு:- ஏற்கனவே பயிற்சி எடுத்தவர்களுக்கான 'சுதர்சனக்கிரியா' இன்று 06.06.2010 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 3.50 மணிக்கு நல்லூர் கம்பன்கோட்டத்தில் நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு : வாழும் கலைக் குடும்பம்.
T.P.: 077 0474757 (1643)



மைசூர் சாமுண்டீஸ்வரி ஜோதிட நிலையம்
இந்தியாவில் மந்திராலயத்திலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை ஜோதிட வல்லுனர்

கங்காதரன் சாஸ்திரி
077 0712537

கைரேகை மூலம் துல்லியமாக நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்

கை ரேகை, நாம நட்சத்திரம், ஜாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப்பிரச்சினை, விஷேட பயணம், எதிரிகள் கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல் இவைகள் அனைத்தும் 11 நாட்களுக்குள் செய்து தரப்படும்.

இவற்றினைத் தெரிந்து கொள்ள ஒருமுறை எங்களைச் சந்தித்து பயன் பெறுங்கள்

121 A, கஸ்தூரியர் வீதி,
யாழ்ப்பாணம்.
(லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகாமையில்)

கைரேகை பார்க்கும் நேரம்:
காலை 7:00 மணி முதல் மாலை 6.00 மணிவரை பார்க்கப்படும்

சேவை முகவர்
விற்பனைக்கு
வைமன்றோட், மணல்தறைலேன், கோண்டாவில், உரும்பிராய், பழம் றோட், உடுவில்பட்டிஓலை, நந்தாவில் அம்மன்கோவில் ஆகிய இடங்களில் காணி, வீடுகள் விற்பனைக்குண்டு.
நல்லூர், யாழ்ப்பாணம் இடங்களில் விற்கவிரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு: சுந்தரம்
021 2229177, 071 4624830 (1646)

Digital Duplicator Ink, Master
சகலவிதமான Digital Duplicator's ற்குரிய Ink, Master எம்மிடம் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு:- 82/13, செட்டித் தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P.:- 0212221388 (1619)

பெண் சமையலாளர் தேவை
உரும்பிராயில் இயங்கும் பெண்கள் இல்லத்திற்கு தங்கி நின்று சமையல் செய்வதற்கு அனுபவமுள்ள பெண்பணியாளர் தேவை.
தகுதியானவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி இல:-
021 222 6391 (இ)

காணி விற்பனைக்கு
கே.கே.எஸ். றோட் இணுவிலில் (தியேட்டர்லேனில்) சுற்றுமதில், கிணற்றுடன் கூடிய 3 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
0778445323 (1633)

காணி விற்பனைக்குண்டு
ஊரெல்லைத்தெரு மீசாலை மேற்கில் ஏ9 றோட்டிலிருந்து 200M இல் 9 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. ஒரு பக்கம் றோட்டும் மறுபக்கம் ஒழுங்கையும் குடியிருப்புக்கள்நெருக்கமாகஉள்ளவீடுகட்டுகந்த இடம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 300 8708 (1615)

## சைவப்புலவர்களுக்கான புராண படனப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தினால் நாளை ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவிருந்த புராண படனப் போட்டி எதிர்வரும் ஜூலை 4 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

இதில் பங்கு பற்றுவோர் தங்களது விண்ணப்பங்களை இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு மேற்படி சங்க செயலாளர் சைவப் புலவர் செ.கந்தசத்தியதாசன் அறிவித்துள்ளார். (6)

## மஹோற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி அமிர்தபாஷினி சமேத சந்திரசேகர வாரிவனநாதர் சிவன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்த் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (6-29)

## பொதுக்கூட்டம்

கைதடி மேற்கு அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தானத்தின் மாதாந்த பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 7 மணிக்கு கந்த ஞானமுத்து தலைமையில் தேவஸ்தான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் தேவஸ்தானத்தின் கும்பாபிஷேகம் சம்பந்தமாக கலந்துரையாடல் இடம்பெறும் எனவும் அங்கத்தவர்கள் தவறாது சமூகமளிக்க வேண்டும் என மேற்படி ஆலய செயலர் தெரிவித்துள்ளார். (6)

## ஆங்கில தினப் போட்டி பற்றிய அறிவித்தல் கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைக்கு இடையிலான வலய மட்ட ஆங்கில தின போட்டிகள் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று நடைபெறுவதை முன்னிட்டு பாடசாலை ஆங்கில பொறுப்பாசிரியர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் 09 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு தென்மராட்சி வலய கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறவிருப்பதால் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வலய கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (6-29)

## வாரம் ஒரு தகவல்

## குழந்தை எங்கே?

"என்ன சேர், குழந்தை உங்களுக்கு பக்கத்தில் ரொம்ப சாதுவா உட்காந்திருக்கான். முகமூடி வேற போட்டிருக்கான்.

"இந்தக் காலத்துப் பசங்களெல்லாம் பார்க்கிறதுக்குத்தான் சேர் சாது. சில சமயத்தில் நம்ம கண்ணில மண்ணைத் தூவிவிட்டு மாயமா மறைஞ்சிடுவாங்க"

"எங்க வீட்டில தினமும் இது ஒரு பிரச்சினை சேர். அடிக்கடி காணாமால் போய்விடுவான். எதிர்வீட்டில் இருக்கிறானா? பக்கத்து வீட்டில் இருக்கிறானா? என்று தேடிப் பிடித்துக் கொண்டு வருவதற்குள் போதும் போதுமென்றாகிவிடுகிறது"

"சின்னப் பிள்ளைகளென்றால் அப்படித்தான் இருக்கும். Child finder என்று ஒரு சாதனம் இருக்காமே? கேள்விப் பட்டீர்களா?"

"இல்லையே!"

"அடுப்பங்கரையில் இருந்து கொண்டே அம்மா ஒரு பட்டனைத் தட்டினால் போதும்... ரி.வி. திரையில் அந்த வீட்டைச் சுற்றியுள்ள இடங்களுக்கான வரைபடம் தெரியும். அதில் அவர்களுடைய குழந்தை எந்த இடத்தில் விளையாடிக்கொண்டிருக்கிறான் என்ற சிக்னல் தெரியும்."

"எப்படி இது?"

"ஒரு சின்ன ஒலிபரப்புச் சாதனத்தை transmitter device குழந்தை போட்டிருக்கிற சட்டையில் பொருத்தி விடவேண்டும். அவ்வளவு தான். அது சிக்னல் அனுப்பிக் கொண்டேயிருக்கும். அது வீட்டிற்குள் இருக்கும் திரையில் தெரியும். நேராக ஓடிப்போய் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்து விடலாம்."

"எங்கள் வீட்டைப் பொறுத்த வரைக்கும் நான் தான் சேர் Child finder குழந்தையைத் தேடிக் கொண்டு வரும் வேலை தினமும் எனக்குத்தான். அதனால நான் எச்சரிக்கையாக இருந்து கொள்வேன்."

"எப்படி?"

"இப்ப உங்கள் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தேன். உங்க வீட்டு வாசலில் இவன் விளையாடிக் கொண்டிருந்தான். கையோடு பிடித்துக் கொண்டு வந்து விட்டேன்"

"உங்களை ஏமாற்றுவது குழந்தைகளுக்கு கஷ்டமாக இருக்காது என்று தான் எனக்குத் தோன்றுகிறது."

"ஏன் அப்படிச் சொல்றீங்க?"

" நீங்க இப்ப பிடித்து வைத்திருப்பது உங்க குழந்தை இல்லை சேர். என்னுடைய குழந்தை. முகமூடியை எடுத்து விட்டு முகத்தைக் காட்டுகிறான் பாருங்கள்."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## விண்ணப்பம் கோரல்

### இறுதித் திகதி நீடிப்பு

அரசாங்க சேவையின் கனிஷ்ட ஊழியர்களை அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III ற்கு தரம் உயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

12.07.2010 ஆம் திகதிக்கு முன்னர் நிரந்தரப் பதவியொன்றில், குறைந்த பட்சம் 5 வருடகாலப் பகுதியை தொடர்ச்சியாகவும் ஆர்வத்துடனும் திருப்திகரமாகவும், சேவையாற்றியுள்ளவராக இருக்க வேண்டுமென்பதுடன் அதனைப் பற்றி திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்- என்றும் அறிவிக்கப்படுகிறது.

2010 மே மாதம் 14 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மேற்படி பரீட்சை காட்டப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 12.07.2010 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

### பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு

பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் பதிவாளர் சேவை தரம் II ற்கு பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு திட்டமிடப்பட்ட உள்ளக நேர்முகப் பரீட்சைக்கு பதிவாளர் நாயகத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

விண்ணப்பதாரி பதிவாளர் சேவையில் III ஆம் தரத்தில் வினைத்திறமை காண் பரீட்சையில் சித்தியடைந்து இருப்பதுடன் அத்தரத்தில் எட்டு வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தை கொண்டிருத்தல் வேண்டும் எனவும் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதிக்கு கிட்டிய ஐந்து வருடங்களை முழுமையாக பூர்த்தி செய்திருப்பதுடன் அரச மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் எனவும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் அலுவல்கள் தொடர்பாக அனுபவமும் அறிவும் ஆங்கில மொழி தொடர்பான அறிவும் பெற்றிருத்தல் வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்காக அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பப் பத்திரங்கள் எதிர்வரும் 05.07. 2010 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில், பத்திரமுல்லை, டென்சில் கொப்பேகடுவமாவத்தை, இல.234/ஏ3 இல் அமைந்துள்ள, பதிவாளர் நாயகம் திணைக்களம், பதிவாளர் நாயகம். என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

விண்ணப்பப் பத்திரங்கள் அனுப்பப்படும் உறையின் மேல் மூலையில் பதிவாளர் சேவையின் தரம் II பதவிகளுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்ளல் 2009 எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். இவை தொடர்பான மேலதிக விபரங்களை வலம்புரிக் காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிட முடியும். (ச-3)

## இராசி பலன்

*06-06-2010*
*(வைகாசி 23,ஞாயிற்றுக்கிழமை*
*நவமி பிற்பகல் 5.21 மணிவரை*
*உத்தரட்டாதி முழுவதும்*
*இராகுகாலம் 4.22-5.52 மணிவரை*
*சுபநேரம் 8.52-10.22 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | காரிய அலைச்சல், சுபசெலவு, சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல். |
| இடபம் | தெய்வ சிந்தை, தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, சயன சுகம். |
| மிதுனம் | ஆரோக்கிய நிலை, தொழில் மேன்மை, இஷ்ட சித்தி, முயற்சி கைகூடும். |
| கடகம் | பிரயாணம், பொருள் விரயம், தேவையற்ற பயம், திடீர்நன்மை. |
| சிங்கம் | ஆரோக்கியக் குறைவு, பொருள் விரயம், மரியாதைக் குறைவு, போசன சுகம். |
| கன்னி | தேக நலன், கீர்த்தி, முயற்சி கைகூடும், பிரயாண நன்மை. |
| துலாம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், போசன சுகம், பகைவர் நேசம், பொருள் சேர்க்கை. |
| விருச்சிகம் | பணக் குறைவு, அஜீரண ரோகம், காரிய இடையூறு, குடும்பக் கவலை. |
| தனுசு | தன்னம்பிக்கைக்குறைவு, தன விரயம், நல்ல செய்தி, தொழில் விருத்தி. |
| மகரம் | மனோதைரியம், காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, உறவினர் வருகை. |
| கும்பம் | விவாதம், போசனசுகக் குறைவு, தனவிரயம், முயற்சி தாமதம். |
| மீனம் | முயற்சி கைகூடும், நண்பர்கள் சந்திப்பு, போசன சுகம், தேகநலன். |


வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 150 | 100 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 80 | 90 | 110 |
| தக்காளி | 140 | 150 | 110 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 80 | 100 | 100 |
| கரட் | 140 | 160 | 160 |
| பூசனி | 50 | 60 | 70 |
| புடோல் | 40 | 50 | 50 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 100 | 120 | 90 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 50 |
| பயற்றங்காய் | 60 | 80 | 110 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 80 | 100 | 90 |
| கறிமிளகாய் | 150 | 160 | 190 |
| முருங்கைக்காய் | 250 | 280 | 200 |
| போஞ்சி | 130 | 150 | 180 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 45 |
| கீரை - 1 பிடி | 30 | 35 | 30 |
| தேசிக்காய் | 150 | 160 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

# கொக்குவில் கலாபவனம்
# பொன்விழா நிறைவு –வாழ்த்துக்கள்

## பொன்விழா காண்கிறது கலாபவனம்


கலாபவனத்தின் முகப்புத் தோற்றம்

கலைக்கோர் உறைவிடம் - அது
கொக்குவில் கலாபவனம்
நர்த்தனத்தின் ஆலயம் - அது
நாளும் ஒளிர்ந்திடும் ஒளிமுகம்

தேரோடும் மஞ்சவனப்பதி தனிலே
சீரோடு விளங்கிடும் செந்நெறி ஆலயம்
புகழ்பூத்த வித்தகராம் சுப்பையா வள்ளலின்
புனிதப்பணியினிலே வித்தான கலாபவனம்


அகவையில் ஐம்பது கழிகிறது
அகிலத்தில் அதன் ஒளி மிளிர்கிறது
பொன்விழா காண்கிறது கலாபவனம்
பெருமைகொண்டு நிற்கிறது யாழ் நகரம்

நாட்டிய முத்துக்கள் நாளும் மலர்ந்திட
நானிலம் மீதினில் நர்த்தனம் சிறந்திட
பாரோங்கும் புகழ் பாரினில் மிளிர்ந்திட
பாவையர் ஆடவர் பரதம் பயின்றிட

வேர்விட்டு விழுதெறிந்து விருட்சமாய் நிற்கிறது
நர்த்தனக் களிப்பினிலே திருநடனம் புரிகிறது
தித்திக்கும் கலை அமுதை தினம் அள்ளித் தருகிறது
நெஞ்சத்து சுமைகளெல்லாம் இதனாலே கலைகிறது

புகழ் பூத்த கலைஞரெல்லாம் - கலா
பவனம் உன் பொக்கிஷங்கள்
பெயர் சொல்லும் கலைஞரெல்லாம்- நீ
பெற்றெடுத்த முத்துக்கள்

வித்துவம் நிறைந்திட சாத்வீகம் மிளிர்ந்திட
கலை நயப் பயிற்சியையும் திறனாய்வுத் தேடலையும்
வழங்கிடும் நம் கலாபவனம் பல்லாண்டு வாழ்கவென
மானவர் நாம் பணிவுடனே சிரம்தாழ்த்தி வணங்குகிறோம்.


கலைச்செல்வன்
**ஏரம்பு சுப்பையா**

**மாணவர்கள்,**
**கலாபவனம்,கொக்குவில்.**

(1635)



சிக்கனமான
இல்லத்தரசிகளுக்கு
Diva
டிடர்ஜன் பவுடர்
New Formula
Diva
Detergent Powder
1 Kg
The No.1 Washing
Powder In Sri Lanka
புதுச் சேர்க்கையுடன் இதமான
லெமன் வாசனையையும் தரும்
லெமன் வாசனையுடனும் புதுச் சேர்மானத்துடனும் வரும் தீவா டிடர்ஜன் பவுடர் துணிகளில் அழுக்கை முன்பை விட இலகுவாகவும், விரைவாகவும் அகற்றுகிறது. நேரத்தையும், வேலையையும், பணத்தையும் மீதப்படுத்தும் தீவா டிடர்ஜன் பவுடர் சிக்கனமான இல்லத்தரசிகளின் இன்றைய தெரிவு.

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இலங்கை அரசை விசாரிக்குமா?



இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ இந்தியாவுக்கு வரப்போகிறார். மீண்டும் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அவர் மேற்கொள்ளும் முதல் இந்தியப் பயணம் இது.

**இந்தியா எனக்கு உறவு, மற்ற நாடுகள் எனக்கு நண்பர்கள் !** என்று வசனம் பேசிய ராஜபக்ஷ இங்கே வருவதன் உண்மையான காரணங்கள் இன்னும் முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை. ஒருங்கிணைந்த பொருளதார கூட்டுறவு ஒப்பந்தம் (CEPA) ஒன்றை இலங்கையும் இந்தியாவும் ஏற்படுத்திக் கொள்ள திட்டமிட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த ஒப்பந்தம் இலங்கையின் நலன்களுக்கு எதிரானது. எனவே,இதில் ராஜபக்ஷ கையெழுத்திடக்கூடாது எனப் பெரும்பாலான இலங்கை ஊடகங்கள் பிரசாரம் செய்து வரும் வேளையில் இந்த ஒப்பந்தம் இலங்கை அரசுக்கு சாதகமானது தான் என்ற செய்தியும் சில ஏடுகளில் வெளிவந்துள்ளன.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா 80 துறைகளை இலங்கைக்கு திறந்துவிடும். ஆனால் ,இலங்கை வெறும் 20 துறைகளை மட்டும்தான் திறக்கும். இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டால் ,இலங்கையைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் வேண்டுமானாலும் இந்தியாவில் வந்துவேலை செய்யமுடியும். அவர்களுக்கு எந்தத் தடையும் இல்லாமல் விசா வழங்க இந்தியா முன்வந்துள்ளது. இத்தகைய தகவல்களை சுட்டிக்காட்டி இந்த ஒப்பந்தம் இலங்கைக்கு சாதகமானது என இலங்கையின் மத்திய வங்கியும் வரவேற்றுள்ளது.

இல்ங்கையின் ஜனாதிபதியாக மட்டுமன்றி, அதன் நிதியமைச்சராகவும் இருக்கும் ராஜபக்ஷவின் தவறான அணுகுமுறையால் ஐ.எம்.எஃப் , இலங்கைக்கு வழங்கவேண் டிய கடன் தவணையை நிறுத்தி வைத்து விட்டது. யூன் மாத இறுதியில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட பிறகு, நிலைமையை ஆராய்ந்து அதன் பிறகு அந்த தவணை வழங்கப்படும் எனத் தெரிகிறது. இலங்கையில் பொருளாதாரம் மிகவும் மோசமாக இருந்தது.

பணவீக்கம் 28 சதவீகிதமாக இருந்தது. கடுமையான பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அது ஒற்றை இலக்கத்திற்குக் குறைக்கப்பட்டது. ஆனால் ,இப்போது மீண்டும் பண வீக்கம் அதிகரிக்கத்தொடங்கி விட்டது.

பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டி விட்டேன் என என்னதான் ஜனாதிபதி கூச்சலிட்டாலும் அங்கு நடந்தது ஓர் இனப்படுகொலை தான் என்பதை எல்லோருமே அறிவார்கள். இவ்வளவு காலமாக தமிழர் பிரச்சினையில் பாராமுகமாக இருந்துவிட்ட சர்வதேச சமூகம், இப்போது தான் சற்று விழித்துக்கொண்டது போலத் தெரிகிறது.

இலங்கை இராணுவத்தின் போர்க்குற்றங்களை விசாரிக்கவேண்டும் என்ற கோரிக்கை நாளுக்கு நாள் வலுத்துவருகிறது. பல்வேறு மனித உரிமை அமைப்புகளை தொடர்ந்து, இப்போது ஐ.நா. மனித உரிமைகள் பிரிவின் தலைவராக இருக்கும் நவநீதம்பிள்ளை இந்தக் கோரிக்கையை எழுப்பியுள்ளார்.


இலங்கை அரசின் மீது போர்க்குற்ற விசாரணை நடத்தப்படவேண்டும். **அது நியமித்துள்ள விசாரணை கமிசனை நம்ப முடியாது !** என நவநீதம்பிள்ளை வலியுறுத்தி இருக்கின்றார். ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 14ஆவது அமர்வில் உரையாற்றிய நவநீதம்பிள்ளை , உலக அளவில் மனித உரிமைகள் நிலவரங்கள் குறித்த அறிக்கை ஒன்றையும் அங்கு சமர்ப்பித்தார்.

மனித உரிமை நிலவரங்களை பொறுத்த வரை சர்வதேச மட்டத்திலான சில நிகழ்வுகளை சுட்டிக்காட்டியுள்ள அவர்,அதில் முதலாவதாக இலங்கை நிலவரம் குறித்துத் தனது கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்டப் போரின் போது அங்கு நிகழ்ந்ததாக கூறப்படும் கொடுமைகள் பற்றி ஐ.நா. மனித உரிமை கவுன்சிலில் விவாதிக்கப்பட்ட நேரத்தில்,

இலங்கை அரசாங்கம் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியது. அவற்றை அது நிறைவேற்றவே இல்லை. தான் உறுதியளித்த விடயங்களை செய்யுமாறு இலங்கை அரசை ஐ.நா. சபை வலியுறுத்த வேண்டும் என்று நவநீதம்பிள்ளை கேட்டுக்கொண்டுள்ளார். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவும் பரிகாரம் கிடைக்கவும் அத்துடன் குற்றங்களுக்கு காரணமானவர் கள் நீதி முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படவும் இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் , இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்திற்கும் உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

போர்க்காலத்தில் நிகழ்ந்தவற்றை குறித்து ஆராய்வதற்காக இலங்கை அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டுள்ள, **படிப்பினைகள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு** நம்பகமானதொரு ஏற்பாடு அல்ல. இலங்கை அரசாங்கத்தின் முந்தைய நடைமுறைகள்,இப்போது அது நடந்துகொள்ளும் விதம் குறித்து கிடைக்கின்ற தகவல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பார்க்கும் போது, இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்களை விசாரிக்க சர்வதேச அளவிலான சுயேட்சையான ஏற்பாடே பொருத்தமாக இருக்கும் என்று



நவநீதம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் நிகழ்ந்த போர்க்குற்றங்கள் குறித்து விசாரிக்கப்பட வேண்டும் என்று சர்வதேச அளவில் செயற்படும் மனித உரிமை அமைப்புகள் தீவிரமாக பேசத் தொடங் கியுள்ள சூழலில்,இத்தகைய கோரிக்கைகளை நிராகரிப்பதற்காகவே அந்த ஆணையத்தை இலங்கை அரசு அமைத்திருக்கிறது.

**அந்த குழு இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான ஓர் ஏற்பாடு** என்று இலங்கை அரசு கூறி வருகிறது.


போர்க்குற்றங்கள் குறித்த புகார்களை இந்த ஆணையம் விசாரிக்குமா என்று கேட்கப்பட்ட போது **பயங்கரவாதிகளை ஒழித்துக் கட்டி சாதனை செய்திருப்பவர்களை எப்படி குற்றவாளிகள் என அழைக்க முடியும்?** என்று ராஜபக்ஷ கேட்டிருக்கின்றார். எனவே, இந்த ஆணையம் சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்காகவே அமைக்கப்பட்டிருக்கிறது என்பது அம்பலமாகி இருக்கிறது.

**சர்வதேச மனித உரிமை அமைப்புகளான சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமை கண்காணிப்பகம், இன நெருக்கடிக்கான அமைப்பு** ஆகியவை இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் குறித்து கடந்த சில நாட்களாக பல்வேறு ஆதாரங்களுடன் கூடிய அறிக்கைகளை வெளியிட்டு இலங்கை அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தி வருகின்றன.

இந்தச் சூழலில் ஐ.நா. சபை இது பற்றி ஏதாவது நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடையே மீண்டும் துளிர்த்துள்ளது. ஐ.நா. பொதுச்செயலாளர் பான்கிமூன் இலங்கை அரசின் போர்க்குற்றங்கள் தொடர்பாக அமைதி காத்து வருவதை சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கடுமையாக விமர்சனம் செய்துள்ளன.

ஆனால்,இவை எதுபற்றியும் இலங்கை அரசு அலட்டிக்கொள்ளவில்லை.

அல்ஜஸீரா தொலைக்காட்சிக்கு அண்மை



யில் பேட்டியளித்த ராஜபக்ஷ, இலங்கையை **கேள்வி கேட்பவர்கள் அமெரிக்காவையோ, இங்கிலாந்தையோ கேள்வி கேட்க முடியுமா? ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் பாகிஸ்தானிலும் அவர்கள் செய்வதைப் பற்றி ஒரு வார்த்தையும் கேட்காமல் இலங்கையை மட்டும் ஏன் கேட்கிறீர்கள்** என்று பதில் கேள்வி எழுப்பியுள்ளார்.

மனித உரிமை அமைப்புகளின் அழுத்தம் ஒரு புறம் என்றால்,உகண்டாவில் நடக்கவுள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் குறித்த மாநாடு இன்னொரு பக்கம் ஐ.நா. பொதுச்செயலாளருக்கு நெருக்கடியை ஏற்படுத்தி வருகிறது.

ருவண்டாவிலும் முன்னாள் யுகோஸ்லாவாகியாவிலும் நடத்தப்பட்ட இனப்படு கொலைகளைத் தொடர்ந்து உருவாக்கப்பட்டதுதான் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்.

1998ஆம் ஆண்டு ரோமில் நடைபெற்ற மாநாட்டில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டு 'ரோம் சட்டம்'என ஒரு சட்டமும் உரு வாக்கப்பட்டு,தற்போது சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் செயற்பட்டு வருகிறது. தேசிய அளவிலான நீதி மன்றங்கள் அதிகாரத்தை கையில் வைத்திருப்பவர்களால் முடக்கப்படும் போது , செயலிழக்க வைக்கப்படும் போது சர்வதேச அளவிலான ஏற்பாடு தேவைப்படுகிறது. அவ்வாறு உருவாக்கப்பட்டதே இந்த நீதிமன்றமாகும். மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை இழைத்த ஆட்சியாளர்கள், ஆயுதக் குழுக்களின் தலைவர்கள் போன்றவர்களையும் இது விசாரிக்கக்கூடிய அதிகாரம் பெற்றுள்ளது.

இந்த ஒப்ந்தத்தில் கையெழுத்திட்டுள்ள நாடுகளை மட்டுமன்றி ஒரு சிறப்புத் தீர்மானத்தின் அடிப்படையில் மற்ற நாடுகளில் நடந்ததாகத் கருதப்படும் குற்றங்களையும் இது விசாரிக்கும். அதற்குத் கூடுதல் அதிகாரத்தை வழங்க வேண்டும் என்றும் அதனுடைய எல்



லைக்குள் மேலும் பல செயல்களைக் குற்றங்களாக வரையறுக்க வேண்டுமென்றும் இப்போது குரல்கள் எழுந்து கொண்டிருக்கின்றன.

ஐ.நா.பொதுச் செயலாளரும் கூட அதைப் பற்றி பேசியிருக்கின்றார். குற்றவாளிகள் தண்டனை எதுவும் இல்லாமல் தாம் தப்பித்து விடலாம் என்று எண்ணுவது நீதிக்கு உதவியாக அமையாது. அவர்கள் எத்தகையவர்களாக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும். அதற்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை அதிகாரம் கொண்டதாக நாம் மாற்ற வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

ஐ.நா.சபையின் முன்னாள் செயலாளரான கோபி அனான் ,போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகள் குறித்த குற்றச் சாட்டுக்கள் தண்டிக்கப்படாமல் போய்விடக் கூடாது என்று வலியுத்தியுள்ளார். அவர், இஸ்ரேல் இராணுவம் காசாப் பகுதியில் செய்துள்ள அத்துமீறல்களையும் இலங்கை இராணுவம் செய்துள்ள படுகொலைகளையும் சுட்டிக் காட்டி இருக்கின்றார்.

ஐ.நா.சபையின் உறுப்பு நாடுகளில் மூன்றில் இரண்டு பங்கு நாடுகள் ரோம் சட்டத்தை அங்கீகரித்துள்ளன. மற்ற நாடுகள் இன்னும் இதுகுறித்து ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை. அப்படி கையெழுத்துப்போடாத நாடுகளில், இந்தியா,இலங்கை உள்ளிட்டவையும் அடங்கும். இந்த மாநாட்டையொட்டி மனித உரிமை ஆர்வலர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர். போர்க்குற்றங்கள் தொடர்பான சாட்சிகளின் வாக்குமூலங்களை பெறுவதற்கும், அத்தகைய சாட்சிகளுக்கு உரிய பாதுகாப்பை அளிப்பதற்கும் சிறப்பு படையொன்று உருவாக்கப்பட வேண்டும் என்று மனித உரிமை ஆர்வலர்கள் வற்புறுத்தி வருகின்றனர்.

இலங்கையில் போர்முடிவுக்கு வந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டு ஓர் ஆண்டு கடந்து விட்ட நிலையிலும்,தமிழ் மக்களுக்கு எதிரான ஒடுக்கு முறைகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. தமிழர்களின் தாயகப் பகுதிகளில் சிங்களவர்கள் குடியேற்றப்படுவதாகப் புகார்கள் வந்த வண்ணம் உள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கின்ற இயற்கை வளங்களை அழிப்பதிலும் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது. அங்கிருக்கின்ற வனப் பகுதியில் சுமார் நாலாயிரம் ஏக்கர் அளவுக்கான காடுகள்அழிக்கப்படுவதாக அங்குள்ள சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் ஆதாரத்தோடு புகார் கூறுகின்றனர்.

கொக்கிளாய் பகுதியில்தான் இத்தகைய வன அழிப்பு நடந்திருப்பதாகக் கூறப்படுகிறது. மக்களுடைய மீள் குடியேற்றத்துக்காக இந்த நிலம் தேவைப்படுகிறது என அரசாங்கத்தால் சொல்லப்பட்டபோதிலும், தமிழர்களின் வளங்களை அழிக்கும் (13ஆம் க்கம் பார்க்க)

**ஜூனியன் விகடன்**

# உயரமான அணைகள்

தண்ணீரை தேவைக்கேற்ப சேமித்து பயன்படுத்த மனிதன் அணைகளைக் கட்டத் தொடங்கினார். இன்று உலகெங்கிலும் அணைகள் உண்டு. அவற்றில் அதிக உயரமான 5 அணைகளைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

**இந்தியாவின் டெகிரி அணை**

உலகில் 5 உயரமான அணைகளில் இந்தியாவில் உள்ள டெகிரி அணைக்கும் இடமுண்டு. இது உத்ராஞ்சல் மாநிலம் டெகிரி



நகரில் அமைந்துள்ளது. கங்கையின் கிளை நதியான பாக்ரதி ஆற்றின் குறுக்கே இந்த அணை கட்டப்பட்டுள்ளது. இதன் உயரம் 261 மீற்றர் (855 அடி). இந்த அணை உலகின் உயரமான அணைகளில் 5 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

**கிராப் டி டிக்ஸ்யென்ஸ் அணை**

சுவிற்சர்லாந்து நாட்டில் உள்ள கிராப் டி டிக்ஸ்யென்ஸ் அணை உலகின் 2 ஆவது உயரமான அணை என்ற சிறப்புக்குரியது. கொங்கிரீட் அதிகமாக பயன்படுத்தப்பட்டு கட்டப்பட்ட அணை யாகவும் இது திகழுகிறது. இதன் உயரம் 285 மீற்றர். இங்கு நீர்மின் உற்பத்தி நடை பெறுகிறது. ஆண்டுக்கு 200 கோடி கிலோ வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.



**இன்குரி அணை**

உயரமான அணைகளில் மூன்றாவது இடத்தில் இருக்கிறது இன்குரி அணை. ஜார்ஜியா நாட்டின் இன்குரியாற்றில் இது கட்டப்பட்டுள்ளது. இது 272 மீற்றர் உயரமுடையது. இந்த அணையில்உள்ள கொங்கிரீற் ஆர்ச் உலகில் உயரமான ஆர்ச் என்ற சிறப்பைப் பெறுகிறது. இங்கும் நீர்மின்நிலையம் செயற் படுகிறது.



**உயரத்தில் நம்பர் 1**

தஜிகிஸ்தானில் தான் உலகிலேயே மிக உயரமான அணை இருக்கிறது.

வாக்ஸ் ஆற் றின் குறுக்கே இந்த அணை கட் டப்பட்டிருக்கிறது. 'ரக்டேம்' என்பது இதன் பெயராகும். இது 1961 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 1980 இல் கட்டி முடிக்கப் பட்டது. 314 மீற்றர் உ்யரமுடைய இந்த அணைதான் இதுவரை உலகின் உயரமான அணையாக இருக்கிறது.



**அழிவால் பிரசித்தி பெற்ற அணை**

இத்தாலியில் உள்ள வாஜோ நீட் அணை உலகின் 4 ஆவது உயரமான அணையாக இருக்கிறது. இது 262 மீற்றர் உயரம் கொண்டது.



மற்ற அணைகளை விட இதற்குரிய சிறப்பு இதன் சுவர்தான். அடித்தளத்தில் 27 மீற்றர் அகலத்திலும் உச் சியில் 3.4 மீற்ற ராகவும் சுவரின் தடிப்பு இருக்கிறது. 1963 ஆம் ஆண்டு அணை வடிவமைப்பாளர் களின் கவனக்குறைவால் புவியியல் தன்மை சரிவர சோதிக்காமல் கட்டப்பட்டதால் அணையின் மேற் பகுதியின் ஒரு புறம் உடைப்பு ஏற்பட்டு பல கிராமங்கள் அடியோடு அழிவுக்கு உள்ளானது.

அதன் பின்னர் இந்த அணை மிக உறுதியாக எழுப்பப் பட்டுள்ளது.

# உங்களுக்கு பதிலாக வேலைக்கு போகும் ரோபோ!




இன்றைய சூழலில் வேலை.... வேலை... என்று எந்திர கதியில் இயங்கும் மனிதன் சீக்கிரமே களைப்படைந்து விடுகிறான். ஒரே நேரத்தில் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வேண்டி நெருக்கடி ஏற்படுகிறது. சிக்கலான இத்தகைய நேரங்களில் உங்களுக்கு பதிலாக (பினாமி போல) ஆஜர் ஆக போகிறது இந்த ரோபோ.

இதைப் பயன்படுத்தி உங்கள் வேலைகளைச் செய்ய வைக்கலாம். நீண்டநேரம் நடக்கும் கூட்டங்களில் இந்த ரோபோவைக் கலந்துகொள்ளச் செய்து தேவையான விபரங்களை பெறலாம். உறவினர்களின் சுபநிகழ்ச்சிகளில் பங்கெடுக்கச் செய்து வீடியோ கான்பரன்ஸ் முறையில் உறவுகளிடம் நட்பு பரிமாறிக் கொள்ளலாம்.

நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்தே இந்த ரோபோவை இயக்க முடியும் என்பது தான்இதன் சிறப்பு. கலிபோர்னியாவின் சிலிகான் வேலி பகுதியில் இந்த ரோபோ வடிவமைக்கப்பட்டுள்ளது. போப் கிறிஸ்டோபர் என்பவர் இதை உருவாக்கி இருக்கிறார். க்கியூ.பி. ரோபோ (Q.B Robot) என இதற்கு பெயரிடப்பட்டுள்ளது.


வேலைகளை சிறப்பாக செய்து முடிப்பதற்காக இந்த ரோபோவில் பல சிறப்பு வசதிகள் இருக்கிறது. அதில் குறிப்பிடத் தக்கது இந்த ரோபோவின் உயரம் . சாதாரணமாக 3 அடி உயரத்தில் இருக்கும் ரோபோ ஒரு வேலையைச் செய்யும் போது (தேவை பட்டால்) தன் உயரத்தை கழுத்தை நிமிர்த்துவதன் மூலம் 5.7 அடியாக உயர்த்தி பணியை செய்து முடிக்கும்.கண்கள் போல பார்க்கும் திறனுக்காக 5 எம்பி. கமரா பொருத்தப்பட்டுள்ளது. நெற்றி இருக்கும் இடத்தில் சிறுதிரை உள்ளது. இதில் உங்கள் (உரிமையாளர்) படம் தெரியும். இதன் மூலம் கான்பரன்ஸ் முறையில் பேச முடியும். காது போல கேட்கும் வேலையைச் செய்ய 3 மைக்ரோபோன்கள் உள்ளன.



வயரில்லா தொழில்நுட்பத்தில் இணைப்பு கொடுக்கப்பட்டிருப்பதால் வீட்டில் இருந்து செல்போன், கணனி மூலம் தொடர்பு கொள்ளலாம். கான்பரன்சிங் முறையில் மற்றவர்களுடன் தொடர்புகொள்ளவும் ஒரு வேலையை செய்ய வைக்கவும் முடியும்.

பல்வேறு பணிகளில் ஈடுபடும் தொழில் அதிபர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு இந்த ரோபோ வசதியாக இருக்கும் . இதன் விலை சுமார் 25 இலட்சம் ரூபாய்.

# ரி.வி.க்கு அப்புறந்தான் நீங்கள்!



இன்று இல்லத்தரசிகள் ரி.வி. நிகழ்ச்சிகளில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். அது எந்த அளவுக்கு என்றால் ''ரி.விக்கு அப்புறந் தான் நீங்க'' என்று சொல்லும் நிலைக்கு வளர்ந்துவிட்டது என்கிறது ஒரு ஆய்வு.

இங்கிலாந்தில் இது தொடர்பான ஆய்வு நடந்தது. அப்போது பத்தில் ஒருவர் டி.வி.க்கு அப்புறந்தான் மற்றவர்கள் என்ற நிலையில் இருக்கிறார்கள் என்று தெரியவந்தது. அவர்களுக்கு கணவன், மனைவி ,குழந்தைகள் உறவுகள் இவர்களெல்லாம் ஒரு பொருட்டே இல்லை.

ஆய்வில் 11 சதவீதம் பேர் டி.வி. நிகழ்ச்சிகள் நம்பிக்கையைச் சிதைப்பதாகவும் நேரத்தை வீணாக்குவதாவும் கருத்து தெரிவித்தனர். மற்றொரு பத்து சதவீதம் பேர் ரி.வி தான் எங்களுக்கு உயிர் மற்றதெல்லாம் அப்புறம் தான் என்கின்றனர். ரி.வி.யை சிறிய நேரம் பொழுதுபோக்குக்காக மட்டுமே பார்ப் போம் என்றும் மூன்றாம் தரப்பினர் கூறினர்.

10 இல் நான்குபேர் வேலை பளுவில் இருந்து ரி.வி. 'ரிலாக்ஸ்' தருவதாகவும் பயனுள்ள விடயங்களை தெரிந்து கொள்ள உதவுவதாகவும் கூறினார்கள்.

ரி.வி.நிகழ்ச்சியை சந்தைப்படுத்தும் இயக்குனர் ஒருவர் கூறும்போது ''தொலைக்காட்சியானது பொழுதுபோக்கு பயனுள்ள விடயங்கள், சந்தை பொருட்கள் விபரம் என பலவற்றையும் தருவதால் வீட்டின் ஒரு அங்கமாக மாறி உள்ளது'' என்றார்.

ஆனால் விஞ்ஞானிகளோ ஒரு நாளைக்கு ஒரு மணி நேரத்துக்கு அதிகமாக டி.வி. பார்ப்பவர்கள் பல்வேறு வியாதிகளுக்கு ஆளாகிறார்கள் என்கிறார்கள். ''இவர்கள் பெரும்பாலும் புற்றுநோய் மற்றும் இதய வியாதிகளால் பாதிக்கப்படுகிறார்கள்'' என்று எச்சரித்தனர்.

முந்தைய ஆய்வு ஒன்றில் ஒரு நாளில் 4 மணி நேரத்துக்கு மேல் ரி.வி.பார்த்தவர்கள் வெகுவிரைவில் இறந்துவிடுகிறார்கள் என்று எச்சரித்தது நினைவிருக்கலாம்!.




# பல்சுவை கதம்பம்

# முதல் முதலாக தொலைபேசி



மனித குலத்தின் வளர்ச்சிக்கு தகவல் பரிமாற்றம் என்பது மிகவும் முக்கியம். புறாக்கள், தூதுவர்கள், என்று இருந்த தகவல் பரிமாற்றம், தபால் போக்குவரத்து, தந்தி என அடுத்த கட்டத்தை அடைந்தது.

அதற்கு அடுத்த கட்டமாக இன்னும் என்ன செய்யலாம் என தீவிரமாக ஆராய்ச்சிகள் செய்ய ஆரம்பித்தார்கள். அதன் தொடர்ச்சியாக தொலைபேசி கண்டு பிடிக்கப்பட்டு... பல்வேறு மாற்றங்களை அடைந்து, தற்போது 3ஜி செல்போன் வரை வளர்ந்திருக்கிறது. அதன் வரலாற்றைத் தெரிந்து கொள்ளலாமா...?

✦1860 இல் முதன்முதலாக ஜேர்மனியைச் சேர்ந்த ஜோஹன் பிலிப் றெய்ஸ் டாஸ் தொலைபேசியை மக்கள் மத்தியில் செயல்படுத்திக் காட்டினார்.

✦இத்தாலியின் அன்டோனியோ மெயூசிச்சி தான் 1849 இலேயே முதல் முதலாக தொலைபேசியைக் கண்டுபிடித்ததாக வழக்குத் தொடர்ந்தார்.ஆனால், அவர் கண்டு பிடித்த தற்கான காப்புரிமம் எதுவும் பெற்றிருக்காத தால் அவ் வழக்கு ஏற்றுக்கொள்ளப்பட வில்லை.

✦ஸ்கொட்லாந்தின் அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல், முதல் முதலாக 1876 இல் தொலைபேசிக்கான காப்புரிமத்துக்கென பதிவு செய்தார். மூன்றுநாட்கள்கழித்து, அதை மக்கள் மத்தியில் செயல்படுத்திக் காட்டினார்.

✦அதே நாளில்.. ஒரு மணி நேரத்துக்குப் பின், அமெரிக்காவின் எலிஷா க்ரே தொலைபேசிக்கான காப்புரிமத்தை எதிர்த்து வழக்குத் தொடர்ந்தார்.ஆனால், அமெரிக்க காப்புரிம அலுவலகம் எலிஷாவின் வழக்கைத் தள்ளுபடி செய்தது.

✦அமெரிக்காவின் கனெக்டிகட் தொலைபேசி நிறுவனம், முதல் முதலாக 1880 இல் மக்களுக்காக பொதுத் தொலைபேசி மையத்தைத் திறந்தது.

✦ 1889 இல் முதல் முதலாக அமெரிக்காவின் அல்மோன் ஸ்டோவாகர் தானியங்கி தொலைபேசி இணைப்பகத்துக்கான காப்புரிமத்துக்கு பதிவுசெய்தார்.காப்புரிமம் 1891 இல் கிடைத்தது.

✦ முதல் முதலாக வில்லியம் க்ரே 1889 இல் நாணயத்தைப் போட்டுப் பேசும் தொலைபேசிக்கான உரிமத்தைப்பெற்றார்.

✦1896இல் முதல் முதலாக டயல் செய்யும் தொலைபேசியினை அமெரிக்காவின் மில்வவுகி (Milwaukee) யில் பயன் படுத்தப்பட்டது.

✦டென்மார்க்கின் வால்டெமர் பவுல் சென், முதல் முதலாக 1898 இல் பதில் சொல்லும் தொலைபேசியினை வடிவமைத்து,1899 இல் அதற்கு காப்புரிமம் பெற்றார்.

✦முதல் முதலாக நியூயோர்க் நகரில் 1906 இல் தொலைபேசி டைரக்டரி விசாரணை சேவை ஆரம்பிக்கப்பட்டது.


✦அமெரிக்காவின் பெல் லேபாரட்டரிஸ் உருவாக்கிய வீடியோ தொலைபேசி முறையை ஏடி அண்டு டி நிறுவனம் முதல் முதலாக 1927 இல் செயல்படுத்திக் காட்டியது.

✦1935 இல் முதல் முதலாக இங்கிலாந்தின் சர் கிலெஸ் கில்பெர்ட் ஸ்காட் என்ற கட்டடக் கலை வல்லுநர் ஆறாம் ஜோர்ஜ் மன்னரைப் போற்றும் வகையில் ரி 6 தொலைபேசிப் பெட்டியை வடிவமைத்தார்.

✦1978 இல் சிகாகோவில் இல்லினோய்ஸ் பெல்முதல்முதலாக செலுலர் மொபைல் தொலைபேசியை அறிமுகப்படுத்தினார்.

✦1981 இல் தி நோர்டிக் மொபைல் டெலிபோன் சிஸ்டம் என்ற நிறுவனம் முதல் முதலாக சர்வதேச செலுலர் தொலைபேசி முறையை சுவீடன் பின்லாந்து டென்மார்க் மற்றும் நோர்வே ஆகிய நாடுகளுக்குப் பயன்படுத்தியது.







✦இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பின்லாந்து தான் அதிக அளவு செல்போன்களைப் பயன்படுத்திய நாடாக இருந்தது. அங்கு 65 சதவீத மக்கள் ஒரு செல்போனையாவது பயன்படுத்திக் கொண்டிருந்தனர்.

✦முதன் முதலாக 1990 களில் இந்தியாவில் செல்போன் அறிமுகப்படுத்தப்பட்டது.

✦ இப்போது உலகில் செல்போன் பயன்படுத்தும் நாடுகளில் சீனாவும் இந்தியாவும் முன்னிலை வகிக்கின்றன.



யாழ்.மாவட்ட கிராம சேவையாளர்களுக்கான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நெவின் பத்மதேவா மங்கல விளக்கேற்றுவதையும் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய அதிகாரி பியகம உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட கிராம சேவையாளர்களையும் படங்களில் காணலாம். -(படங்கள்:-அலுவலக செய்தியாளர்)

## பாடசாலை மாணவர்களுக்கிடையேயான புராண படனப் போட்டி முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் பொன்விழாவை முன்னிட்டு யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட புராண படனப் போட்டி முடிபுகள் மேற்படி சங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

*ஆண்கள் பிரிவு*

யா/இணுவில் இந்துக் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, யா/அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.

*பெண்கள் பிரிவு*

யா/மீசாலை வீரசிங்கம் ம.வி,யா/இணுவில் இந்துக் கல்லூரி, யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தி.

வெற்றிபெற்ற மாணவர்களுக்குரிய பரிசில்கள் பொன்விழா நிகழ்வில் வழங்கப்படும் எனவும் பரிசில் வழங்கப்படும் தினம் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் சங்கத்தின் செயலர் தெரிவித்துள்ளார். (6)

## தமது விடுதலை தொடர்பான முனைப்புக்களை மேற்கொள்ளுமாறு சம்பந்தனிடம் தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்

(கொழும்பு)

எதிர்வரும் 8ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் போது,தமக்கு பொது மன்னிப்பு வழங்குவது பற்றிய சபை ஒத்தி வைப்பு விவாதம் தொடர்பான யோசனை ஒன்றை சமர்ப்பிக்குமாறு வெளிக்கடை மற்றும் மகசின் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தமிழ்த்தேசியக்கூட்ட மைப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

120 தமிழ் அரசியல் கைதிகள் இந்தச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களில் பலர் இதுவரை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவில்லை என்றும் கூறியுள்ளார்.

தமது விடுதலை தொடர்பான ,முனைப்புகளை மேற்கொள்ளும்மாறு இந்த அரசியல் கைதிகள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இருந்த போதும் சந்தேகத்தின் பேரில், கைது செய்யப்பட்ட ஜே.வி.பியின் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது.

இதேபோல் இலங்கை,இந்திய சமாதான உடன்படிக்கையின் பிரகாரம் தம்மை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தமிழ் அரசியல் கைதிகள் கேட்டுள் ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் பொதுமன்னிப்பு தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்களின் கவனத்திற்கு கொண்டு சொல்ல வேண்டும் எனவும் அரசியல் கைதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (6)

## சிறைச்சாலை நெருக்கடிகளை குறைப்பதற்கு ஆலோசனை குழு

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் நெருக்கடிகளைக் குறைப்பதற்கு குறுகிய மற்றும் நீண்ட கால ஆலோசனைகளை முன் வைப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியு.குணசேகர தெரிவித்துள்ளார்.

இக்குழுவிற்கு ஆலோசனைகளின் அறிக்கையை இரண்டு வாரகாலத்திற்குள் வழங்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னரும் பல்வேறு ஆணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டு அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

எனினும் உடனடித் தீர்வு காண்பதற்கு ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படாததனால் இந்தக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நகரங்களில் அண்மித்த பகுதிகளில் இருந்து வெளிப்பிரதேசங்களில் அமைக்கப்படவுள்ள சிறைச்சாலைகளில் போதிய இடவசதிகளுடன் அமைப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் கூறினார். (ச-9)

## மலேரியா நோயை இலங்கையிலிருந்து முற்றாக ஒழிக்க விசேட நடவடிக்கை

(கொழும்பு)

மலேரியா நோயை இலங்கையிலிருந்து முற்றாக ஒழிப்பதற்கு விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இந்தத் திட்டத்தின் கீழ் எதிர்வரும் 4 வருட காலப் பகுதியினுள் மலேரியாவை முற்றாக ஒழிக்க முடியும் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் தேசிய மட்டத்திலான திட்டத்திற்காக யு.எஸ்.எயிட் அமைப்பு 3 இலட்சம் அமெரிக்க டொலர்களை வழங்க முன் வந்துள்ளது.

இந்த நிதியானது மலேரியா நோய் மற்றும் காசநோய் தடுப்புக்காக பயன் படுத்தப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் குறித்த உத்தியோக பூர்வ நிகழ்வு சுகாதார அமைச்சர் மைத்திரிபால ஸ்ரீசேனவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (6-3)

## இந்தியாவிலிருந்து 500 பஸ்களை கொள்வனவு செய்ய தீர்மானம்

(கொழும்பு)

மக்களுக்கு சிறந்த சேவை வழங்கும் நோக்குடனும் தனியார்துறைக்குப் போட்டியாக இ.போ.சபையை பலப்படுத்துவதற்காகவும் கூடுதலான பஸ்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய இந்தியாவில் இருந்து 500 பஸ்களை இ.போ.சாவுக்கு கொள்வனவு செய்யவுள்ளதாக இலங்கை போக்குவரத்துச்சபை தலைவர் எம்.டி.பந்துசேன தெரிவித்தார்.

இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் பஸ்களில் பெரிய ரக அசோக் லேலண்ட் பஸ்கள் பிரதான வீதிகளிலும் கிராமப்புற வீதிகளிலும் ஈடுபடுத்தப்படவுள்ளதோடு மீள் குடியேற்றம் நடத்தப்பட்ட பகுதிகளிலும் ஈடுபடுத்தப்படும் எனவும் இ.போ.ச. தலைவர் கூறினார்.

இது தவிர யாழ்ப்பாணத்தில் சேவையில் ஈடுபடுத்துவதற்காக சொகுசு பஸ்களை தருவிக்கவும் இ.போ.ச. திட்டமிட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கில் மீள் குடியேற்றப்பட்ட பகுதிகளில் 300 க்கும் அதிகமான பஸ்கள் ஏற்கனவே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)

## நாட்டில் தற்போது சீரான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது

### பிரதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது சீரான பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்த முன் னேற்றத்திற்கான ஆதாரங்களை மக்கள் கண்கூடாக பார்க்கக் கூடிய தாக உள்ளதாக அவர் கூறினார்.

மகிந்த சிந்தனை கொள்கையின் பிரகாரம் பல்வேறு வெற்றிடங்கள் அமுல்படுத்தப்பட்டதனாலேயே குறிப்பிட்ட பொருளாதாரத்தில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளது என்றும் பிரதியமைச்சர் மேலும் தெரிவித்தார்.

பிராந்தியத்தின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் இத்து நாடு அனைத்துத் துறைகளிலும் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றத்தைக் கண்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் அரசாங்கம் பொருளாதார அபி விருத்தித்திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகிறது எனவும் உலக வங்கியும் ஏனைய நிதி நிறுவனங்களும் இணைந்து பொருளாதார முன்னேற்றம் குறித்து ஒரு தெளிவான விளக்கத்தை கொண்டுள்ளன என்று பொருளியல் நிபுணர் கலாநிதி ரஞ்சித் பண்டார கருத்துத் தெரிவித்துள்ளார். (6-3)

Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower

19
வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
May 2010 to Oct 2010
தமிழ் மொழி மூலம்

தபால் மூலம்

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவளை மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 484

விண்ணப்ப முடிவுத் திகதி: 10.06.2010

# தமிழ்த்தினப் போட்டியில் இரண்டாமிடம்

(கரவெட்டி)

வடமாகாண தமிழ்த்தினப் போட்டியில் 17 வயதுப் பிரிவினருக்கான பாவோதலில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவி செல்வி நித்தியானந்தன் சாமந்தி இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளார்.

முதலாமிடத்தை மன்னார் மாவட்ட பாடசாலையைச் சேர்ந்த மாணவியொருவர் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (6-24)



# முக்கிய பிரபுக்களுக்கான பாதுகாப்பு வாபஸ்பெற்றுக்கொள்ளப்படவுள்ளது

(கொழும்பு)

முக்கிய பிரபுக்களுக்கான பாதுகாப்பு வாபஸ் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

இதற்கமைய சில அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கிய பிரபுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள தேவையற்ற பாதுகாப்பு வாபஸ் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாகவும் இந்நடவடிக்கை எதிர்வரும் வாரமளவில் ஆரம்பிக்கப்படும் எனவும் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

முக்கிய பிரபுக்களுக்கான பாதுகாப்பினை துஸ்பிரயோகம் செய்வதாக ஜனாதிபதிக்கும் பாதுகாப்புச் செயலாளருக்கும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படும் அதேவேளை இவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பில் விசேட அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)


## பாராட்டுகின்றோம்



எமது பாடசாலையில் ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் கடமையாற்றிய **திருமதி கௌரி பரந்தாமன்** அவர்கள் இலங்கை அதிபர் சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து அதிபர் சேவை வகுப்பு III ஐ 13.11.2009 திகதியில் இருந்து பதவியுயர்வு பெற்றமையை இட்டு பாடசாலை சமூகம் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பதவி உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.

பாடசாலை சமூகம்
யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்
திருநெல்வேலி

(1634)

## மக்கள் வங்கியின் அழைப்பிதழ்

நாளை **07.06.2010** திங்கட்கிழமை மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகள் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் **திரு. அஜித் நிவாட் கப்ரால்** அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இவ்விழாவில் மக்கள் வங்கியின் தலைவர்
*திரு.டபிள்யூ.கருணஜீவ* அவர்களும்
பிரதம நிறைவேற்று அதிகாரியும் பொது
முகாமையாளருமான *திரு பி.வி.பத்திரன* அவர்களும்
மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர்களும் கலந்து
சிறப்பிக்கவுள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| மக்கள் வங்கி – பரந்தன் கிளை | – | காலை 10.15 மணி |
| மக்கள் வங்கி – கிளிநொச்சி | – | காலை 11.30 மணி |
| மக்கள் வங்கி – மாங்குளம் | – | மாலை 03.45 மணி |

இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உதவிப் பொதுமுகாமையாளர்,
மக்கள் வங்கி , வடவலயம்.
2010.06.04

முகாமையாளரும் பணியாளர்களும்,
மக்கள் வங்கி ,
பரந்தன், கிளிநொச்சி,
மாங்குளம்.

(சி/378)

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி


# 06.06.2010

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

- 1508 - புனித ரோமப் பேரரசன் முதலாம் மாக்சிமிலியன் பிரியுல்லா என்ற இடத்தில் வெனிசியப் படைகளிடம் தோற்றான்.
- 1644-கின் அரசமரபின் மஞ்சு படைகள் பெய்ஜிங் நகரைக் கைப்பற்றின.
- 1711-யாழ்ப்பாணத்தில் இந்து மதச் சடங்குகளுக்கு ஒல்லாந்து அரசினால் தடை விதிக்கப்பட்டது.
- 1752-மொஸ்கோவின் மூன்றில் ஒரு பங்கு தீயினால்அழிந்தது. 18,000 வீடுகள் சேதமடைந்தன.
- 1761-சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் வீனஸ் கோளின் நகர்வு பூமியின் பல இடங்களிலும் அவதானிக்கப்பட்டது.
- 1808- நெப்போலியனின் சகோதரன் ஜோசப் பொனபார்ட் ஸ்பெயின் மன்னன் ஆனான்.
- 1844-கிறிஸ்தவ இளையோர் அமைப்பு (ymca)லண்டனில் அமைக்கப்பட்டது.
- 1859-குயின்ஸ்லாந்து என்ற பெயரில் புதிய குடியேற்ற நாடு நியூசவுத் வேல்ஸ் இலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது.
- 1862- அமெரிக்க உள்நாட்டுப் போர் அமெரிக்கப் படைகள் டென்னசியில் மெம்ஃபிஸ் நகரை கூட்டமைப்புப் படைகளிடம் இருந்து கைப்பற்றின.
- 1882- அரபிக் கடலில் இடம்பெற்ற புயலால் பம்பாயில் 100,000 பேர்களுக்கு மேல் கொல்லப்பட்டனர்.
- 1912 -அலாஸ்காவில் நொவரப்டா எரிமலை வெடித்தது.
- 1930 இலங்கையில் வீரகேசரி நாளிதழ் தொடங்கப்பட்டது.
- 1944 இரண்டாம் உலகப் போர் நோமண்டி சண்டை ஆரம்பமானது.
- 1971-சோயுஸ் 11 ஏவப்பட்டது.
- 1974- சுவீடனில் நாடாளுமன்ற முடியாட்சி அமைக்கப்பட்டது.
- 1981- இந்தியாவில் தொடரூந்து ஒன்று பகுமதி ஆற்றில் தடம் புரண்டு வீழ்ந்ததில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.
- 1984-இந்திய இராணுவத்தினர் அம்ரித்சரில் உள்ள பொற்கோயிலில் தாக்குதல் நடத்தியதில் 576 பேர் கொல்லப்பட்டு 335 பேர் காயமுற்றனர்.
- 2004-இந்தியாவில் தமிழ் மொழி செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.

## பிறப்புக்கள்

- 1799-அலெக்சாண்டர் புஷ்கின், ரஷ்ய எழுத்தாளர், கவிஞர்(இ-1837)
- 1893- கழுமுத்து தியாகராஜன் செட்டியார், இந்திய விடுதலை இயக்கத்தில் முக்கியப் பங்கு வகித்தவர். (இ.1974)
- 1901- சுகர்னோ,இந்தோனேசியாவின் முதல் அதிபர் (இ-1970)
- 1930- சுனில் தத்,இந்தியத் திரைப்பட நடிகர் (இ.2005)
- 1948-சுப்ரமண்ய ராஜு,தமிழ் எழுத்தாளர் (இ.1987)
- 1986- பாவனா,தமிழ் மலையாளத் திரைப்பட நடிகை

## இறப்புகள்

- 1947-மு.சி.பூரணலிங்கம் பிள்ளை,தமிழறிஞர் (பி.1866)
- 1968-ரொபேர்ட் எஃப் கென்னடி, அமெரிக்க செனட்டர் (பி.1925)
- 1996-ஜோர்ஜ் ஸ்நெல்,நோபல் பரிசு பெற்றவர் (பி.1903)
- 2007-வீ.கே. சமரநாயக்க, இலங்கையின் அறிவியியலாளர் (பி.1939)

## சிறப்பு நாள்

சுவீடன் -தேசிய நாள்
தென்கொரியா -நினைவு நாள்
குயின்ஸ்லாந்து நாள்

1944 -இரண்டாம் உலகப் போரின் போது ஓவர்லோட் நடவடிக்கை என பெயரிடப்பட்ட நோமண்டி சண்டைக்காக நேச நாட்டு படைகள், ஆக்கிரமிக்கப்பட்ட பிரான்சில் தரையிறக்கப்பட்டன. முதல் தரையிறக்கம் 1944 ஆம் ஆண்டு இதேநாளில் இடம் பெற்றது. இந் நாள் ஆங்கிலத்தில் டி-டே (D-Day)என அழைக்கப்படுகிறது.






## நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி நாளைமுதல் வருடத்தில் ஒவ்வொரு நாளும் யாழ் நகரில் சேவைபுரிய காத்திருக்கின்றது...

யாழ் வாழ் மக்கள் அனைவரும் சர்வதேச ரீதியிலான வங்கிச்சேவைகளை நாளைமுதல் வருடத்தில் 365 நாட்களும் பெற்றுக்கொள்ளலாம். எமது புதிய யாழ்ப்பாணக் கிளைக்கு சமூகமளித்து எமது பரந்த சேவைகளான சேமிப்பு மற்றும் நடைமுறைக்கணக்கு, நிலையான வைப்புகள், முதலீடுகள், சிறுவர் சேமிப்புத் திட்டங்கள், அடகுச் சேவைகள், கடன் வசதிகள், லீசிங் வசதிகள், வணிக வங்கி முறைமையுடன் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கடன் அட்டை அங்கத்துவம் போன்ற வசதிகளாவன உங்களை மேலும் திருப்திப்படுத்தும்.

சமூகமளியுங்கள்: 35, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். அழையுங்கள்: 0114 711 411 இணையம்: www.nationstrust.com

Nations TrustBank

Midea Electro Mart

Authorized Dealer for Abans Ltd.

PRINTER
HP 1005 Laserjet-16,500/=
HP deskjet 3920-6500/=

SCANNER
CANON LIDE 100-6900/=
HP G 2410-9900/=



| COMPACQ CQ3014 DESKTOP PC | |
|---|---|
| PROCESSOR | Intel core2 Duo 2.8 Ghz E7400 |
| MEMORY | 2 GB DDR2 |
| HART DISK | 340 GB 3Gb/s Hard Disk |
| DISK DRIVE | DVD Writter |
| MONITER | 19" LG LCD |
| UPS | Toyostar 650 VA |
| SPEAKER | 900w |
| MOUSE | Compaq |
| KEYBOARD | Compaq |
| PRICE | 81,900/= |

| PERSONAL PC SYSTEM | INTEL ATOM PC SYSTEM | INTEL DUAI CORE PC SYSTEM | INTEL CORE 2 DUO PC SYSTEM |
|---|---|---|---|
| PROCESSOR | Intel Atom 1.6 GHZ | Intel Dual core2.7GHZ | Intel core2 Duo 2.93 GHZ |
| MOTHER BOARD | Intel 945 GNL Main Board | Intel Chipset G31 main Board | Intel Chipset G31 main Board |
| MEMORY | 1GB DDR-II, 800MHZ | 1GB DDR-II 800MHZ | 1GB DDR-II, 800MHZ |
| HART DISK | 250GB SATA-7200RPM | 250GB SATA-7200RPM | 250GB SATA-7200RPM |
| DISK DRIVE | LG DVD Writer | LG DVD Writer | LG DVD Writer |
| CASING | ATX 500W Ccivo | ATX 500W Ccivo | ATX 500W Ccivo |
| MONITER | 16" LCD AOC | 16" LG LCD | 19" LG LCD |
| KEY BOARD | Multimedia ps\2 | Multimedia ps\2 | Multimedia ps\2 |
| MOUSE | Optical USB\Ps2 | Optical. USB\Ps2 | Optical USB\Ps2 |
| SPEAKER | Genius Multimedia 900W | Genius Multimedia 900W | Genius Multimedia 900W |
| UPS | Toyostar 650 VA | Toyostar 650 VA | Toyostar 650 VA |
| PRICE | 44,500/= | 49,900/= | 59,900/= |

| LAPTOPS | COMPACQ 610 | PROLING MINI |
|---|---|---|
| PROCESSOR | Intel core 2 Duo 2.2 Ghz E7400 | Atom Intel 1.6Ghz |
| MEMORY | 2 GB DDR2 | 1 GB |
| HART DISK | 500GB HDD | 160 GB |
| DISK DRIVE | DVD Writter | Nill |
| CAMERA | Wab Camera | web Camera |
| MONITOR | 14.6" | 9" |
| OTHERS | WIFI Blue Tooth | WIFI Blue Tooth |
| PRICE | 81,000/= | 49,900/= |

★ Abans உத்தரவாதத்துடன் இலவச விநியோகத்தைப் பெற்றிடலாம்

★ Computers- Three Years Warranty

★ Fridge, washing machine and TV- Five Years Warranty

No:1-I, 1-H, STANLEY ROAD, JAFFNA, SRI LANKA.
TEL: 021 222 4566, FAX: 021 222 1646,
E-mail:midea21@gmail.com










ஒரு மாத
நிரந்தர வைப்பிற்கு

அதி கூடிய வட்டி
எம்மிடமிருந்து

மேலதிக விபரங்கள்
சம்பத் வங்கியிலிருந்து

ஜூன் 30 வரை மாத்திரமே

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

Sampath Bank PLC Fitch Ratings AA-(lka)

සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
SampathBank



கொமர்ஷல் வங்கியின்

பொற்கடன்

அடகுச் சேவை



அதிகூடிய முதல்
குறைந்த வட்டி

- தங்க ஆபரணத்திற்கு எதிராக வங்கி மேலதிகப் பற்று வசதி
- தங்க ஆபரணத்திற்கு அதிகூடிய முதல்
- உயர்ந்த இரகசியத் தன்மை
- தங்க ஆபரணத்திற்கு பாதுகாப்பு உறுதி
- குறைந்த வட்டி வீதம்

தற்போது தெரிவு செய்யப்பட்ட கொமர்ஷல் வங்கிக் கிளைகளில் அடகுச் சேவை வசதிகளை பெற்றுக்கொள்ள முடியும்.

OgilvyAction

COMMERCIAL BANK
www.combank.lk

# நவீன எண் ஜோதிடம்

4

இதேபோன்றது தான் ஒவ்வொருவருடைய பெயர் ஓசைகளிற்கும், அதன் எண் கணக்கு அடக்கத்திற்கும், அவரவர் பிறப்புத் திகதிகளுக்கும், திருமணம் செய்துகொண்ட திகதிகளிற்கும், அவர்கள் எடுத்துக்கொண்ட ஆண்டிற்கும், அவர்கள் திருமணம் செய்யும் போது அவர்களின் வயது எண்ணிற்கும், திருமணத்தின் போது அவர் குறித்துக் கொண்ட தகாத எண்கொண்ட திகதிகளும் நாட்களும் ஆசார அத்திவாரம் இல்லாத கட்டமைப்புக் கொண்ட ஆரம்பங்களும் இன்றைய மனிதனின் வாழ்வினைக் குழப்பும் அல்லது சிதற வைக்கும் அணுகுண்டாக இருக்கின்றது. இது எண்ஞான, விஞ்ஞான வலுக்கொண்ட ஜோதிடத்தின் கணிப்பாகும்.

ஆகவே அந்தக் கால கட்டத்தில் நட்சத்திரம், கிரகம், துணைக்கோள் ஒவ்வொன்றினதும் இயக்கமும் தனித்தனி அதிர்வுகளை ஏற்படுத்தி விடுவதாகக் குறிப்பிட்டிருக்கின்றார். ஒவ்வொரு விண்மீனிற்கும் வேறு வேறு இயக்கம் , வேறு வேறு அதிர்வு. எல்லா விண்மீன்களின் ஒட்டுமொத்தமான சங்கீத ஒத்திசைவைத்தான் பிரபஞ்ச ஐக்கிய இணைப்பின் செயற்பாட்டினை இராசி மண்டலம், கிரக கோள்கள், காந்த ஈர்ப்பு இயக்கங்கள் என்று ஒன்றிணைந்த அதன் செயற்பாட்டை பிரபஞ்ச ஒத்திசைவு என்கின்றோம்.

புத்தம் புதிதாகப் பிறக்கும் குழந்தையின் புத்தம் புதிய மனதில் அந்த வேளையில் இயங்கும் ஒரு விண்மீனின் அதிர்வு அழுத்தமாகப் பதிந்துவிடுகின்றது. (பிறப்புத் திகதி, மாதம், ஆண்டு, கால நேர கிரகங்களின் கணிப்புப் பார்வை) அந்த விண்மீன் பிறக்கப் போகும் ஜீவனுக்கு அது தன் தாயின் கருவில் கதையின் முடிவை விதியின் படைப்பாய் எழுதிவைத்து விடுகிறது. அதுவே இன்ன திகதி, மாதம், ஆண்டு கரு அறையில் இருந்து பூமியின் மடியில் கை தருவதற்கு பிறப்புத் திகதி, மாதம், ஆண்டை குறித்துக் கொடுப்பதும் அதுவே.

வாழ்நாள் முழுவதும் அதனுடைய உடல் நலமும், சீர்கேடும் அந்த விண்மீன் அதிர்வுகளால் தான் உண்டாகின்றது. நீங்கள் பிறக்கும் போது உள்ள விண்மீனின் அதிர்வுடன் உங்களுக்கு ஒத்திசைவு ஏற்பட்டால் நீங்கள் உடல் நலத்தோடு நல்ல திகதி, மாதம், ஆண்டில் பிறந்து வாழ்வீர்கள். அன்றேல் உங்கள் ஒத்திசைவு பிளவுபட்டால் வாழ்வு மட்டுமல்ல உடல் நலம் கூடக் கெடும்.

ஒருவரது ஜன்ம நட்சத்திரம் அல்லது பிறந்த திகதி, மாதம், ஆண்டு மேற்சொன்ன வகையில் ஏதும் ஒன்று தெரியாமல் அவரது உடலின் ஒத்திசைவை அறியமுடியாது. அது தெரியாமல் ஒருவரை எந்த விதத்திலும் அவருடைய எதிர்கால வாழ்வு, வளம், மகிழ்ச்சி, சந்தோசம், தொழில் மற்றும் ஏனைய விசேட தகைமைகளைப் பற்றி அறிவதும் கடினம். அவைகள் சற்று ஏறுமாறாக அமைவின் விஞ்ஞான - மெய்ஞ்ஞான - எண்ஞான ஜோதிடப் படி குணப்படுத்துவதும் கடினம் என்றும் அவர் கூறினார்.

இங்கே ஒரு கேள்வி? உடல் நலம் என்றால் என்ன? இதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள முயலவேண்டும். வாழ்வின் வளம் அல்லது வாழ்வின் கீழ்நிலை இவற்றின் உடல் நலத்தைப் பற்றி மருத்துவரை அணுகிக் கேட்டால் நோயின்மைதான் உடல் நலன் என்பார் வைத்தியர்.

ஜோதிடரிடம் அணுகிக் கேட்டால் கிரகங்களின் குழப்பநிலை, எதிர்ப்பு நிலை என்று பொதுவாகச் சொல்வர். சமய ஆசாரிகளிடம் (மதகுருமார்) அணுகிக் கேட்டால் தெய்வக் குறை, சாத்தானின் தண்டனை என்று பொதுவாகச் சொல்வர்.

ஆனால் இது எதிர்மறை இலக்கணம். நோயின் அடிப்படையில் உடல்நலத்தை நாம் கணிப்பது துரதிர்ஸ்டவசமானதே. உடல் நலம் என்பது உடன்பாடான அம்சமும் உண்மையான நிலைமையும்.

இதில் உள்ளார்ந்த விளக்கம் உடலில் உள்பக்கத்தைப் பொறுத்தும் உடலின் வெளிப்பக்கத்தைப் பொறுத்தும் எதிர்நோக்கி வரும் தாக்குதலும் ஆக்குதல்களும்தான் இதனுடைய வேறுபாடுகள். இருப்பினும் இவை அனைத்தும் பிரபஞ்சத்தில் இருந்து வரும் அழுத்தங்கள் காரணமாக இருப்பினும் அவரவர் பிறப்புத் திகதி, நேரம், காலம் , நட்சத்திரம், இராசி இவைகளைப் பொறுத்து அவர்களின் பங்கீடுகள் மேற்படி நேயருக்கு கூடலாம், குறையலாம். அதனால் தேய்வும் வளர்வும் பல வடிவத்திலும் நிகழலாம். இதுவே உண்மையின் நிலைமை.

புதிய எண்ஜோதிட விஞ்ஞானத்தின் ஆழமான அற்புத அர்த்தங்களை சிறிதளவு உங்களுக்கு விளக்குகின்றேன். அப்போதுதான் ஜாதகம், எண்ஜோதிடம் இதன் பழைய அறிவியல் அம்சத்தை எளிதாக, விரைவாக புரிந்துகொள்ள முடியும்.

எண் ஜோதிட நிபுணர்
**பேராசிரியர் ராஜராயேந்திரன்**

பூமியில் பல பூச்செடிகள் பூத்துக் குலுங்குகின்றன. சில பகுப்பினங்கள் கண்ணுக்கு அழகைக் கொடுப்பதும், பறிப்பதற்கோ நுகர்வதற்கோ அப்பாற்பட்டனவாக இருக்கின்றன. மேலும் சில பறிக்க முடியாது. பார்வைக்கு மட்டும் இருந்து பூவாக, காயாக மாறி கனியைத் தருகின்றன. (தோடை , எலுமிச்சை பூக்கள்) இன்னும் சில தெய்வ தரிசனத்திற்குக் கூட திருவருளை வாங்கித்தரும் தேவ மாதாக்கள் ஆக ஆலயங்களில் அருள் வழங்கித் தரும் மலர்களாகவும் மணமகள், மணமகன் மங்கல காரியங்கள் அத்தனைக்கும் மகிழ்வோடு மகிழ வைத்து மங்கல நிகழ்வுகளை மலரவைக்கும் மலராகவும் இருக்கின்றன.

(தொடரும்)

## இந்திய திரைப்பட விழாவில் முன்னணி நட்சத்திரங்கள் பங்கேற்காமைக்கு அரசே பொறுப்பு

### ஐ.தே.க.எம்.பி.ரோஸி சேனாநாயக்க



(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்ற இந்திய சர்வ தேச திரைப்பட விழாவில் முன்னணி ஹிந்தி நடிகர், நடிகையர் பங்கேற்காமைக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஸி சேனாநாயக் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இராணுவ ரீதியில் யுத்தத்தை வென்றெடுத்துள்ள போதிலும் சமாதானம் இன்னும் வெற்றி கொள்ளப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் நடைபெறும் திரைப்பட விழாவில் பங்கேற்க வேண்டாம் என சில தரப்பினர் நடிகர், நடிகையருக்கு அழுத்தம் கொடுத்ததாகவும் அவர் கூறினார்.

அரசாங்கம் வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வுத் திட்டத்தை முன்வைக்கத் தவறியுள்ளமையினால் இந்த நிலைமை உருவாகியுள்ளதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6)

## மலேசிய முன்னாள் பிரதமர் இலங்கை விஜயம்

மலேஷியாவின் முன்னாள் பிரதமர் மஹதிர் மொஹமட் எதிர்வரும் செவ்வாய்க் கிழமையன்று இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளப் போவதாக பிரதி வெளிவிகார அமைச்சர் கீதாஞ்சன குணவர்தன முன்னாள் பிரதமரை வரவேற்கப் போவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆசியாவின் முன்னணி வர்த்தக மையமாக மலேஷியாவை உருவாக்கிய பெருமை டாக்டர் மஹதிர் மொஹமட்டிற்கு உரித்தானதெனக் குறிப்பிடப்படுகிறது.

கடந்த 2006 ஆம் ஆண்டில் சீமா உலகத் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மஹதிர் மொஹமட் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

## இரகசியமாகத் தடுத்து வைப்பதை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்

### ஐ.நா.நிபுணர்கள் வலியுறுத்தல்

(கொழும்பு)

பயங்கரவாத நபர்களை இரககசிய இடங்களில் வைத்திருப்பதை முடிவுக்குக் கொண்டு வருமாறு ஐ.நா.வின் உரிமைகள் விவகார நிபுணர்கள் கடந்த வியாழக்கிழமையன்று அறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

அமெரிக்கா உட்பட 66 நாடுகள் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாக ஐ.நா.வின் உரிமைகளுக்கான நிபுணர்கள் குழு குற்றம் சாட்டியிருப்பதாக நெதர்லாந்து வானொலி செய்திச் சேவை தெரிவித்தது.

சித்திரவதை, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை பலவந்தமாக காணாமல் போதல் ஆகிய விவகாரங்களுக்கான நிபுணர் குழுவே இதனைத் தெரிவித்திருக்கிறது.

அமெரிக்கா, இலங்கை உட்பட 66 நாடுகளின் பெயர்களை ஜனவரியில் இக் குழு சமர்ப்பித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் பயங்கரவாத சந்தேக நபர்கள் என்று குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டோரை இரகசிய இடங்களில் வைத்திருப்பது தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியமென்று அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, எதியோப்பியா, ருமேனியா, கொசுவோ, பாகிஸ்தான், அமெரிக்கா உட்பட பல நாடுகளின் அரசாங்கங்களை இந்த விடயம் குறித்து அதாவது தடுத்து வைக்கப்படுவதற்கு உத்தரவிட்டோர் தொடர்பாக விசாரணை நடத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழனன்று இந்த அறிக்கை தொடர்பாக விவாதம் இடம் பெற்றது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவை இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டு மென நிபுணர்கள் வலியுறுத்தினர்.

இது போதிய ஆதாரமாக நாங்கள் கருதுகிறோம். பேரவையானது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சித்திரவதைக்கு எதிரான ஐ.நா.வின் விசேட அறிக்கையாளர் மான்பிரேட் நொவாக் தெளிவாகக் கூறியுள்ளர்.

இரகசியமாகத் தடுத்து வைத்திருப்பதை தடைசெய்வதோடு, உத்தியோகபூர்வமற்ற முறையில் தடுத்து வைத்திருப்பதையும் தடைசெய்யவேண்டும் என்று விவாதத்தின் இறுதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல மாதங்கள் தாமதம் அடைந்தாலும் இந்த விடயத்தை ஒதுக்கிவைக்க முடியாதென்று மனித உரிமைகள் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள், விடயங்களைக் கையாளும் ஐ.நா.வின் விசேட அறிக்கையாளர் மார்ட்டின் ஸ்செனின் வலியுறுத்தியுள்ளார். ஐரோப்பாவிலும் ஜனாதிபதி பராக் ஒபாமா வின் அமெரிக்க அரசாங்கத்திலும் போக்குகள் மாற்றம் பெற்றிருப்பதை நிபுணர்கள் கவனத்தில் கொண்டுள்ளனர்.

ஆயினும் இரகசிய சி.ஐ.ஏ. சிறைகளை மூடுவதற்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்ட போதிலும் உள்மட்ட மோதல்கள் அதிகரித்திருந்தன.

எவ்வாறாயினும், அமெரிக்கா, மேற்குலகின் பலம் வாய்ந்த நாடுகள் மற்றும் எகிப்து, சிரியா, இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகியவற்றிடமிருந்து நடவடிக்கை எடுப்பது தொடர்பாக சிறியளவிலான வாக்குறுதியே வெளிவந்திருப்பதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் தவறானவை என்று பல நாடுகள் தெரிவித்திருப்பதாகவும் நெதர்லாந்து வானொலி செய்தி சேவை இதுபற்றி குறிப்பிட்டிருக்கிறது. (6)


## பிரகீத் எக்நெலியகொடவிற்கு விருது வழங்கப்படவுள்ளது

(கொழும்பு)

காணாமல் போயுள்ள லங்கா ஈ நியூஸ் இணையத் தளத்தின் ஊடகவியலாளர் பிரகீத் எக்நேலியகொடவிற்கு, கேலிச் சித்திர கலைஞர்களின் உரிமைகள் என்ற சர்வதேச வலையமைப்பு, விசேட நிபுணத்திற்கான விருதை வழங்க தீர்மானம் எடுத்துள்ளது.

இந்த விருது வழங்கும் விழா எதிர்வரும் 18 ஆம் திகதி அமெரிக்காவில் நடைபெறவுள்ளது.

கேலிச்சித்திர கலைஞர்களின் தைரியத்தை கௌரவிக்கும் வகையில், பிரகீத் எக்நெலியகொடவின் மனைவியிடம் இந்த விருது வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (6)



# வெளிநாட்டு உதவிகளில் 60 சதவீத நிதி வடமாகாண அபிவிருத்திக்கு பயன்படுகிறது

## வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு



(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்குக் கிடைக்கும் மொத்த உதவிகளில் 60 சதவீதமான நிதி வடமாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கே பயன்படுத்தப்பட்டு வருவதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தைத் துரிதமாக அபிவிருத்தி செய்யும் நோக்கிலேயே அரசாங்கம் இந்தளவு நிதியை ஒதுக்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவ்வாறு ஒதுக்கப்படும் நிதிகள் வடமாகாண உட்கட்டமைப்பு, வீதி, நீர்ப்பாசன ,மின்சார, விவசாய, வீடமைப்பு, குடிநீர் வசதி, மீள்குடியேற்றம், நிவாரண,கல்வி மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுத்திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். (6)

# நிதிமோசடியில் ஈடுபட்ட 2 நைஜீரியர்கள் கைது

(கொழும்பு)

நிதிமோசடியில் ஈடுபட்ட இரண்டு நைஜீரியர்கள் திருகோணமலையில் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்போவதாகத் தெரிவித்து மோசடியான முறையில் இலங்கையர்களிடம் 7ஆயிரம் அமெரிக்க டொலர்களையும் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா இலங்கைப் பணத்தையும் இவர்கள் மோசடி செய்துள்ளனர்.

திருகோணமலைப்பிரதேச தனியார் வைத்தியசாலை ஒன்றின் மருத்துவரிடம் இந்த நபர்கள் நிதிமோசடி செய்துள்ளனர் எனவும் போலி நாணயத்தாள்களை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் சில பொருட்களையும் குறித்த நைஜீரியர்கள் தம்வசம் வைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6)

# உலக நாடுகளுக்கும் இலங்கைக்குமிடையில் முரண்பாடு ஏற்படுவதற்கான காரணம்

## ஜப்பானியதூதுவர் விளக்கம்

(கொழும்பு)

உலக சமூகத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்பாடல் இடைவெளியே முரண்பாடுகளுக்கான முக்கிய காரணி என ஜப்பான் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கைக்கும் உலக நாடுகளுக்கும் இடையில் சரியான தொடர்பாடல் இன்மையே இரு தரப்பினருக்கும் நிலவும் புரிந்துணர்வின்மைக்கான காரணி என இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் கொய்னோ தக்காஷி தெரிவித்துள்ளார்.

இலங்கை தனது நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்திற்கு சரியான முறையில் வெளிப்படுத்தவில்லை என்பதே தமது கருத்து என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு தொகுதி சர்வதே சமூகம் மற்றும் அமைப்புக்கள் ஆகியன இலங்கை தொடர்பில் பாதகமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதாகவும் இலங்கை தனது கருத்துக்களை வலுவானதும் தெளிவானதுமான முறையில் சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்த வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டுமேமாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் காணப்பட்ட நிலைமையும் தற்போதைய நிலைமையும் முற்றிலும் மாறுபட்டதென சுட்டிக்காட்டிய அவர் தன்னம்பிக்கையுடன் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

சர்வதே சமூகத்திற்கு நம்பிக்கை ஏற்படக்கூடிய வகையில் இலங்கையில் சமாதான முன்னெடுப்புகள்மேற்கொள்ளப் பட வேண்டுமெனவும் இலங்கை அரசாங்கத்திற்கு பல்வேறு வழிகளில் ஜப்பான் ஒத்துழைப்பு வழங்கும்எனவும்அவர் உறுதியளித்துள்ளார். (6)


## வயலின் இசை அரங்கு

தென் இந்தியாவில் புகழ் பெற்ற வயலின் இசைக் கலைஞர்களான
அக்கரை சுபலக்சுமி
அக்கரை சொர்ணலதா சகோதரிகளின்

**சிறப்பு இசை நிகழ்வுகள்**

காலம்:- 08.06.2010 செவ்வாய்க்கிழமை
நேரம்:- பி.ப. 5.00 மணி
இடம்:- துர்க்கா மணிமண்டபம், நல்லூர்.
தலைவர்:-செஞ்சொற்செல்வர் திரு.ஆறு திருமுருகன்
பிரதம விருந்தினர் :- E.S.P.நாகரத்தினம்
நிகழ்ச்சி அனுசரணை:- E.S.P. நாகரத்தினம் சக நிறுவனம்
அணி செய் கலைஞர்கள்:-மிருதங்கம் – முதுகலைமாணி N. மாதவன்
கடம் - கலைமாணி N. சிவசுந்தர்
முகர்சிங்- கலாவித்தகர் S.செந்தூரன்

காலம் : -09.06.2010
நேரம்:-பி.ப. 5 மணி
இடம்:-இளங்கலைஞர் மன்றம், சட்டநாதர் வீதி, நல்லூர்.
தலைவர் :-சங்கீதபூஷணம் V.சிவஞானசேகரம்
அணிசெய் கலைஞர்கள் :- மிருதங்கம் – முதுகலைமாணி K.கஜன்
கடம்-முதுகலைமாணி N. மாதவன்
முகர்சிங்- கலாவித்தகர் S. செந்தூரன்

09.06.2010 அன்று திரு .திருமதி யசோதரன் கேதீஸ்வரி அவர்களின் திருமண வரவேற்புபசாரத்தை முன்னிட்டு இந்நிகழ்வு நடைபெறுகிறது.

*கலா ரசிகப் பெருமக்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

**விழா ஏற்பாட்டாளர்கள்**

(1636)


# சர்வதேச குற்றவியல் ......

*06ஆம் பக்கத் தொடர்ச்சி......*

நோக்கத்தோடு தான் இந்த நடவடிக்கையை அரசு மேற்கொண்டுள்ளது என தமிழர்கள் தரப்பில் குற்றம் சாட்டுகின்றனர்.

இதனிடையில், கிளிநொச்சிபகுதியில்கணேசபுரம் என்ற இடத்தில் மலசல குழியொன்றில் ஐந்து சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. இவைஇராணுவத்தினரால் கொல்லப்பட்ட தமிழர்களின் சடலங்கள் என்று சொல்லப்படுகிறது. இன்னும்இப்படி எதனை சடலங்கள் கண்டுபிடிக்கப்படுமோ தெரியவில்லை.

இலங்கை ஜனாதிபதி இந்தியா வரும் போது அவருக்கு எதிராக இங்குள்ள தமிழர்கள் தமது கோபத்தை வெளிப்படுத்த முயல்வது இயல்பானது தான். ஆனால் அத்தகைய எதிர்ப்பு இலங்கையில் வதை முகாம்களிலும் எவ்வித வசதிகளுமற்ற கிராமங்களிலும் வாடுகின்ற தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எவ்விதத்திலும் உதவப் போவதில்லை.

அவர்களது இப்போதைய உடனடித் தேவை மறுவாழ்வும் மறுகட்டமைப்பும் தான். தமிழர் பிரச்சினைக்கு அரசியல்ரீதியான தீர்வினைக் காண்பதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்முயற்சி எடுத்து வருகிறது. அதற்காக இந்தியா அழுத்தம் கொடுக்கிறது எனவும் சொல்லப்படுகிறது.

அது ஒரு புறமிருக்க ஜனாதிபதி ராஜபக்ஷ இந்தியாவுக்கு வரும் போது தமிழர்களின் மறு வாழ்வுக்கான ஒருங்கிணைந்த அமைப்பு ஒன்றை ஏற்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதில் இந்தியாவைச் சேர்ந்த அதிகாரிகள் மட்டுமன்றி இரு நாடுகளையும் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ள வேண்டும்.

ஈழத் தமிழர்களின் மறுவாழ்வுக்கு உதவி செய்ய எவ்வளவோ பேர் காத்திருக்கின்றனர். ரோட்டரி கிளப் போன்ற அமைப்புகளும் தயாராக உள்ளன. ஆனால் அந்த உதவிகளைப் பெற்று விநியோகிக்க இலங்கை அரசின் ஒத்துழைப்பு தேவை. அதை நமது பிரதமர் வலியுறுத்த வேண்டும். தமிழக முதல்வரும் தனது செல்வாக்கைப் பயன்படுத்தித் தமிழர் இனச்சிக்கலைத் தீர்ப்பதற்கு முன்வர வேண்டும்!

# யாழ். குடாநாட்டின் சகல பகுதிகளுக்கும் சீரான மின்சாரம்

## மின்சார சபையின் வடபிராந்திய பிரதிப் பொதுமுகாமையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் இனிமேல் சீரான மின்சார விநியோகம் இடம்பெறும் என்றும் மின்வெட்டை அமுல்படுத்தவேண்டிய தேவை இனிமேல் இருக்காது என்றும் இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளர் எஸ்.முத்துரட்னானந்தன் தெரிவித்துள்ளார்.

இது வரை காலமும் மின் பிறப்பாக்கிகளின் திருத்தவேலைகள் காரணமாக குடாநாட்டின் பல பகுதிகளிலும் மாறி மாறி சிறியளவில் மின்வெட்டை அமுல்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது எனவும் எனினும் மின் பிறப்பாக்கிகளின் திருத்தப்பணிகள் பூர்த்தியாகியுள்ளதால் இனி குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும்சீரானமின்விநியோகம்நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (6)





**Union Assurance** is a leading corporate citizen backed by the strength and stability of one of Sri Lanka's largest conglomerates–John Keells Holdings PLC. Standing on a cornerstone of trust for more than 20 years we have gone onto win the hearts of our customers and employees alike with our integrity and professionalism. Our corporate transparency has garnered us numerous local & international accolades – Union Assurance is one of the most respected corporate entities in Sri Lanka today. Having begun the new decade with a spring in our step we invite you to join the elite force in the chain of trust.

We are in the process of expanding our distribution channels and at present working with some of the reputed banks operating island-wide to offer financial solutions for their customers.

**The Job**

As a Bancassurance Assistant you will be stationed at a branch location belonging to a leading bank. You will be responsible to promote our life insurance products to banking customers on recommendation of the respective bank manager and service those customers on their insurance needs.

**Locations**

Candidates who are residing in following geographical areas are invited to apply for the above post:
**Jaffna, Vavuniya, Mannar, Trincomalee, Batticaloa, Kilinochchi**

**Eligibility**

To be successful you will need to have passed G.C.E. Advance Level and should possess:

- A credit pass for English language at G.C.E. Ordinary Level.
- Motor bike riding license.

Candidates below 25 years of age are encouraged to apply.

The selected candidates will be recruited on fixed term contract basis and high performers can look forward to a rewarding career with a clear path towards personal and professional success coupled with advanced training opportunities and an attractive remuneration package.

Applicants are advised to indicate the position and geographical location applied for on top left corner of the envelope or subject bar of the e-mail and send their CVs along with names of two non-related referees within 10 days of this advertisement to;


Manager, Human Resource Services
Union Assurance PLC
No. 20, St. Michael's Road,
Colombo 03.
E-mail: careers@ualink.lk

union assurance
*Trust in your tomorrow, today.*

(#/380)

# சிங்கம்

தூத்துக்குடி மாவட்டம், நல்லூர் சப் இன்ஸ்பெக்டர் சூர்யா. சென்னையில் நடந்த கொலை வழக்கில் கைதாகும் பிரகாஷ்ராஜுக்கு, நல்லூர் பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என்று நிபந்தனை ஜாமின் அளிக்கிறது நீதிமன்றம் .வேறு ஆளை ஏற்பாடு செய்து கையெழுத்துப் போட வைக்கிறார் பி.ராஜ். இதை கண்டு பிடிக்கும் சூர்யா, அவரு வந்து கையெழுத்து போடணும். இல்லைன்னா இங்க இருந்தபடியே, அவனை தூக்கி உள்ளே வச்சுடுவேன்" என்று கண்டிக்கிறார்.



அவசர அவசரமாக கிளம்பி வரும் பி.ராஜ், சூர்யாவை மிரட்டுகிறார். அவரது ஒவ்வொரு மிரட்டலுக்கும் ஊர் மக்கள் பதிலடி கொடுக்கின்றனர். வேறுவழியில்லாமல் பணிந்து போகிறார். ஒரு கட்டத்தில், இன்ஸ்பெக்டராக பதவி உயர்வு கொடுத்து, தன் ஏரியாவான சென்னை திருவான்மியூருக்கு வரவழைக்கிறார் பி.ராஜ் . பின்னர் தொடங்குவது தகதகக்கும் ஆக்ஷன் மேளா.

காக்கி சட்டைக்குப் பொருத்தமான நடிகர்கள் பட்டியலில் மீண்டும் தனது பெயரை உறுதி செய்திருக்கிறார் சூர்யா. விரைப்பான பார்வை, கம்பீரமான நடை, பொறி பறக்கும் ஆக்ஷன் என அனைத்து ஏரியாவிலும் அமர்க்களப்படுத்தும் சூர்யா, ரசிகர்களின் மனங்களை அள்ளுகிறார். ஊர்க்காரர்களின் சின்ன சின்ன சண்டைகளை பெரிதுபடுத்தாமல், அவர்களை கைகொடுக்க வைத்து , சமரசம் செய்து அனுப்புவது, ஊர்ல எல்லோரும் பங்காளிங்க தான். கேஸை போட்டு அவங்களை அலைய வைக்க மனசு கேட்க மாட்டேங்குது" என்று அவர்களை மனிதாபிமானத்தோடு பார்க்கும்போது நமக்கும் பாசம் வந்துவிடுகிறது.


என்று ஸ்டேஷனுக்கு வரும் அனுஷ்காவின் காதல், அழகான கிராமத்து கவிதை. 'என்னை விட்டுட்டு வேற யாரையாவது கல்யாணம் பண்ணினே,ரூம் போட்டு மேட்டரை முடிச்சுட்டேன்னும் சொல்லிருவேன்' என்று அனுஷ்கா மிரட்டும்போது, தியேட்டரில் விசில் பறக்கிறது.

வில்லத்தனத்தில் மிரட்டுகிறார் பிரகாஷ்ராஜ், கில்லிக்கு பின்னர் அவரது அபார நடிப்பில் அக்னி வெயில். பணக்காரர்களின் வாரிசுகளை கடத்தி வைத்துக் கொண்டு பணத்துக்காக மிரட்டுவதும் புதிதாக கட்டடம் கட்டுபவர்களிடம் மாமூல் தரும்படி வற்புறுத்துவதுமாக அசல் தாதாவாகியிருக்கிறார்.

'அட்ரசே இல்லாத ஊரில் உட்கார்ந்துகிட்டு என்னை மிரட்றியா' என சூர்யவை பி.ராஜ் எச்சரிக்க, பொலிஸ் ஸ்டேஷனுக்கு வெளியே திரளும் ஊர்க்காரர்கள், கார்களை துவம்சம் செய்வது அமர்க்களம் .சென்னைக்கு மாற்றல் ஆகிவரும் சூர்யாவிடம் பி.ராஜ் தொடங்கும் நேருக்கு நேர் மோதல் ஜிவ்வென எகிறுகிறது.

பதவி ஏற்க வந்த முதல் நாளே சூர்யாவை சந்திக்க வரும் பி.ராஜ் உன்னை சும்மா விடமாட்டேன்டா? குடைச்சல் கொடுத்துகிட்டே இருப்பேன் என்று சவால் விடுவதும் அவருக்கு உடந்தையாக உயர் அதிகாரி நிழல்கள் ரவி நடந்து கொள்வதுமாக பரபரக்கிறது காட்சிகள். இவங்களோட நான் மோத விரும்பலை. ஊருக்கே திரும்ப போறேன் என்று காதலி அனுஷ்காவிடம் சூர்யா சொல்வதும் மனைவி வேண்டுமானா பிரச்சினைகளை கண்டு தன்னோட கணவன் ஒதுங்கி போனா நல்லதுன்னு நினைக்கலாம். காதலி அதை விரும்ப மாட்டா என்று அவர் தரும் நம்பிக்கையில் காதைப் பிளக்கிறது கைதட்டல்.

## திரை விமர்சனம்



புலி வேடம் போட்டுக்கொண்டு செல்லும் அனுஷ் காவுக்கு , சூர்யா பளார்விடுவதும், பின்னர் பொம்ப ளைன்னு தெரியாம அடிச்சுட்டேன் ; மன்னிச்சுக் கோங்க. பதிலுக்கு நீங்க வேணா, என்னை அடிச் சுக்குங்க யாரும் பார்க்காத மாதிரி அடிச்சீங்கன்னா, பொலிசுங்கற மரியாதை இருக்கும்" என்றும் சொல்வ தும் அந்த இடத்திலேயே அனுஷ்கா, சரண்டைர் ஆவது இதம்.

வேண்டுமென்றே "அது தொலைந்து போச்சு, இது

எரிமலை எப்படி பொறுக்கும் என்று பாடல் அடிக்கும் லூட்டிகள் கலக்கல் காமெடி . சூர்யா பாணியில் பஞ்சாயத்து செய்து பிரச்சினைகளை தீர்ப்பதாக சொல்லி இன்னொருவர் மனைவியை மற்றொருவருடன் ஓட விடுவது ஸ்டேஷ னில் காமெடியினை விசாரிக்கும் போது விழும் உதையில் நடுரோட்டில் மின்கம்பத்தில் மோதி பல்ப் ஐ உடைப்பது என விலா நோக சிரிக்க வைக்கிறார் விவேக்.

பின்னணியில் விவேக்




விரைப்பான தொழிலதிபராக வரும் நாசர் சூர்யாவின் அப்பாவாக வரும் ராதாரவி எனக்கொரு உண்மை தெரிஞ்சாகணும் என்று அப்பாவியாக வரும் பாண்டு பிரகாஷ் ராஜின் அடியாளாக வரும் ஆதித்யா,கிரேன் மனோகர், தியாகு என ஒவ்வொருவரும் கரக்டரோடு பொருந்துகிறார்கள்.

பிரியனின் ஒளிப்பதிவில் ஒவ்வொரு பிரேமும் கண்ணாடியாக பளபளக்கிறது. தேவிஸ்ரீ பிரசாத்தின் இசையில் பாடல்களும் பின்னணி இசையும் படத்துக்கு பலமாகியிருக்கிறது. பரபரக்கும் திரைக்கதை, மின்னல் வேக ஆக்ஷன் காட்சிகள் என அசத்தலான படத்தை தந்திருக்கும் இயக்குனர் ஹரியை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

## 2 கால்களும் பாதிக்கப்பட்ட 70 வயது மூதாட்டி சினிமாவில் நடிக்கிறார்

நிஷா கென்னடி தயாரிப்பில் உருவாகியிருக்கும் குறுநில மன்னன் படம் விரைவில் ரிலீஸ் ஆகவிருக்கிறது. இந்த படத்தை தொடர்ந்து நிஷாவின் தயாரிப்பில் உருவாகும் படம் காட்டுப்பய. டைரக்டர் தருண்கோபி இயக்கி நடிக்கும் இப்படத்தில் அவருக்கு ஜோடியாக குங்குமப்பூவும் கொஞ்சும் புறாவும் படத்தில் நடித்த தனன்யா நடிக்கிறார்.

இந்த படத்தின் முக்கிய அம்சமாக 70 வயது மூதாட்டி ஒருவர் முக்கிய கரக்டரில் நடிப்பதுதானாம். வத்தலகுண்டு பகுதியை சேர்ந்த பெருமாயி அந்த மூதாட்டி போலியோவால் 2 கால்களும் பாதிக்கப்பட்டவராம்.

## 3 படங்களில் கருணாஸ் ஹீரோ

திண்டுக்கல் சாரதி படத்தைத் தொடர்ந்து 3 படங்களில் ஹீரோவாக நடிக்கிறார் கருணாஸ். இது பற்றி அவர் கூறியதாவது,

கென் மீடியா என்ற நிறுவனம் மூலம் அம்பாசமுத்திரம் அம்பானி படத்தை தயாரித்து ஹீரோவாக நடித்துள்ளேன். படம் முடிந்து விட்டது. யூலை மாதம் ரிலீஸ் ஆக இருக்கிறது. இதையடுத்து ராம் நாத் இயக்கத்தில் தென்னாபிரிக்கா காடுகளில் படமாகும், காட்டுவாசி பற்றிய படம் "கற்றது தமிழ்" ராம் இயக்கும் "தங்க மீன்கள்" மலையாளத்தில் வெளியாகி வெற்றி பெற்ற "யானை வால் மோதிரம்" படத்தின் ரீமேக் ஆகிய படங்களில் ஹீரோவாக நடிக்க உள்ளேன்.




அடிதட்டு மக்களின் வாழ்க்கையை தனது படங்களில் பிரதிபலித்தவர் கே. பாக்யராஜ். அவர் தொட்ட யதார்த்தமான வாழ்க்கை கதைகள் போல்தான் எனது படங்களும் இருக்கும். ஹீரோ என்றவுடன் 50 பேரை ஒற்றை ஆளாக அடிப்பது போன்ற வேடங்களில் நடிக்கமாட்டேன். யதார்த்தமான ஹீரோவாகவே நடிப்பேன் .

இவ்வாறு கருணாஸ் கூறினார்.




## விரைவில் வருகிறது கார்த்தியின் நான் மகான் அல்ல

பிரம்மாண்டமான தயாரிப்பாக ஸ்டுடியோ கிரீன் கே.ஈ.ஞானவேல் தயாரிக்கும் படத்திற்கு "நான் மகான் அல்ல" என்று பெயர் வைத்துள்ளார். பருத்திவீரன், அயிரத் தில் ஒருவன், பையா என தொடர் வெற்றிகளை குவிக்கும் கார்த்தி இந்தப் படத்தில் நாயகனாக நடிக்கிறார். ஆயிரத்தில் ஒருவன் தெலுங்கிலும் வெற்றி பெற்றதையடுத்து பையாவும் தெலுங்கில் சிறப்பாக ஓடிக்கொண்டிருக் கிறது. ஸ



இரண்டு மொழிகளிலும் வெற்றிவாகை சூடும் கார்த்தி யுடன் இணைந்து தெலுங்கில் நம்பர் ஒன்னாக இருக்கும் காஜல் அகர்வால் ஜோடியாக நடிக்கிறார். இவர்களுடன் மற்றும் பல நட்சத்திரங்கள் நடிக்கிறார்கள். வெண்ணிலா கபடிக்குழு வெற்றிப் படத்தை யடுத்து இரண்டாவதாக இயக்கிறார் சுசிந்திரன். இப்படத்தை கதை, திரைக்கதையும் அவரே. தயாரிப்பு கே.ஈ. ஞானவேல் ராஜா.

நக்கல், நையாண்டி பண்ணிக்கிட்டு தனது வாழ்க்கையைப் பற்றி கவலைப்படாமல் வாழும் கதாபாத்திரமாக கார்த்தி நடிக்கிறார். யதார்த்தமான படமாக படமாக்கி வருகிறார் இயக்குனர். நான் மகான் அல்ல விரைவில் வெளியாக இருக்கிறது.

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### சுகமான நினைவுகள்

நினைவுகள் சுகமானவை
உனக்காக என்பதால்
கனவுகள் சுகமானவை
காதல் சுகமானது
காத்திருப்பு சுகமானது
ஒவ்வொரு நிமிடமும்
சுகமானவை
உனக்காக என்பதால்
இவைஎல்லாம் தாண்டி
என் மரணம் கூட
சுகமாக இருக்கிறது அன்பே
உனக்காக மட்டும் என்பதால்

வி.மீரா

### பந்தம்

உலகம் என்ற புத்தகத்தில்
உறவுகள் என்பது
முடிவுகளில்லாத
அத்தியாயங்கள்

கொற்றையூர்
மகே- மேனன்

### விண்ணிலும் மண்ணிலும் கனல் விடும் கதிரவன்

கோடை வெயிலின்
கொடுங்கனலில்
அழுது வடிக்கிறது சரீரம்
வாடை வீசாதோ என்று
ஏங்கிய மூளையோ
வெளியேறத் துடித்து
நாற் திசையும் முட்டுகிறது
பசுமையைக் கருக்கி
மானிடனைக் குளிப்பாட்டி
விசிறிகளின்றி
இலைகளை
உதிரவைத்த
கதிரவனே!
உன்போல் பூமியிலும்
ஆயிரம் கதிரவன்கள்.

ரி. சீதா–கலைப்பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

### வீசுமோ? வசந்தக் காற்று

அகலாத கனவுகளில்
அழியாத நினைவுகளாய்ப் பல
ஆயிரம் பேர் பாவிகளாய்
ஆனதனை யார் மறப்பார்
வேகம் கொண்ட சொல்லின்
வேகம் தணித்த உடல்கள்
வீழ்ந்து கிடந்த மண்ணில்
வீசுமோ? வசந்தக் காற்று.

யோகஸ்ரீ -மண்டைதீவு

### அம்மாவிற்காக

சிந்தித்த விழியெல்லாம்
சிந்தனையில் உன் உருவம்
எண்ணத்தை மாற்ற
என்னால் முடியவில்லை...
இதயத்தில் இடமுமில்லை.
இதயமெலாம் உன்
நினைவுகளே நிரம்பியதால்!
நான் சுவாசிக்கும்
ஒவ்வொரு மூச்சிலும்.... அம்மா!
நீ கலந்துள்ளாய் என்னுடன்...

கே. சாந்தகுமார்
இருபாலை

### மனிதம் எங்கே!

ஆடு மாடுகள் போன்றே
நாமும் ஓடி அலைகின்றோம்!
எட்டுத் திசைகளின்
கதவுகளும் தடையாக
எமக்கு மட்டுமே!
ஒன்பதாவது திசை
காணோம்!
ஓடி ஒழியவும்
உண்டு உறங்கவும்
கண்முன்னே கொடூரங்களின்
ஆரவார அரங்கேற்றம்!
இவை போனாலும்!...
முள்வேலியும்...! அங்கே!
கிடக்கும் பலரது–இன்பம்
வீதியோரம் வேடிக்கை
பார்க்க எதுவும் இருக்ககாணோம்!
வேலிக்குள் ஊனங்களுடன்
உடல்கள் தான் மிச்சம்!

பொலிகையூர்
ஸ்ரீ.சுனந்தன்

### இமயம் தொட...



உருவாக்கு...
எதிர்காலத்தை
உனக்காக
உருவாக்கு
உன்பாதத் தடங்கள்
நீண்டு செல்லட்டும்
உன்பாதையில்
தொடரும் - புதுப்
பயணங்கள்

மாவை. நா.கஜேந்திரா

### நீ வாழ வேண்டும்

உன்னிடம் தானே குளிர்ந்த தென்றலும்
ஒளியும் உள்ளது
நீ இல்லாது நான்
பாலைவன இருளில்
மீட்கமுடியாத பொருளாய்
புழுதியுள் புதையுண்டு கிடக்கிறேன்
இன்று என்னைச்சுற்றி
கல்லறை உண்டு - அதன்
நடுவே முட்செடிகள்
வேரூன்றியுள்ளன
முட்செடிகளின் நடுவே நீ
ரோஜாவாக மலர ஆசைப்படுகிறாய்

பா.கங்கா
வண்ணார் பண்ணை

## மௌனத்தின் தேடல் – 22



சிறுவனே சொல்
கண்ணகி கற்புக்காக
சிலம்பேந்தினாள்
நீ எதற்காக
வில்லேந்துகிறாய்
உன் உரிமைக்காகவா?

ந.துவாரகா
கரவெட்டி தெற்கு

### வஞ்சகமற்ற வயது

சின்னஞ்சிறு சிறுவர்கள்
சுறுசுறுப்பாய் விளையாடும்
சிறுவர்கள்
ராமரைப்போல் வில்கொண்டு
விளையாடும் சிறுவர்கள்
வண்ணவண்ண உடைபோட்டு
சிறுசிறு புன்னகையால் – எம்மை
மகிழ்விக்கும் சிறுவர்கள் – அவர்கள்
தாமரைபோல் முகம்கொண்டு
தாவிக் குதிக்கும் சிறுவர்கள்

ரா.சுமித்திரா
மானிப்பாய் மகளிர் கல்லூரி

### வன்முறை வேண்டாம்

வில்லும் மான்கொம்பும்
கொண்டு நீங்கள்
எங்கு புறப்படுகிறீர்கள்
வன்முறை எண்ணம்
உங்களுக்கு வேண்டாம்

த.கேமராஜி
யாழ்ப்பாணம்

வில்லை விளையாட்டிற்காய்
செய்தீரோ! என்னவோ?
வில் செய்த உன்
வீரப் பிஞ்சுக் கரங்களால்
எய்துவிடு பாலகா
மனித அரக்கர்களை நோக்கி

வினுஷா செல்வராஜா
பிளவத்தை

### தடைகளை தகர்ப்போம்

தம்பி...!
தடைகளைத் தகர்த்து
தடங்களைப் பதித்து
தடைதனைத்தாண்டு
தானே... தகரும்
கையின் விலங்கு

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

பள்ளி செல்லவேண்டிய
பிள்ளைகளே
வில்லெடுத்து யார் மீது
போர்தொடுக்கிறீர்கள்!
வன்முறையான உலகம்
உங்களையும்
கெடுத்துவிட்டதா?

த.குகா
கொக்குவில்

வேரின் விழுதுகளே!
வேள்விகள் முடிந்துவிட்டது
இனியும் நமக்கு
வேண்டாம் இந்த
வேடுவ விளையாட்டு

து.துவாரகா
சங்கானை

அழகாய் சிரித்து
அன்பால் அரவணைக்கும்
கள்ளம் கபடமற்ற
இனிமையான வயது இது
நாளை – நீ
இப்படி இருக்கப்போவதில்லை
இன்றே நன்றாய்
விளையாடி மகிழ்ந்துவிடு

செ.சுபாத்தா
குப்பிளான்

### சிவந்த மண்...

அம்பு வில் கொண்டு எம் இனம்
ஆண்ட மண் இது
அகதி முகாம் பல கொண்டு
அழிவுகள் பலகண்டு
செங்குருதியில் சிவந்து நிற்கிறது
இளவலே நீ என்ன
செய்யப் போகிறாய்

த.கஜா

### துணிவு

காடாய்ப் பறக்கிறது
நம்மவர் தேசம்
உறவுகளை இழந்த
பிஞ்சு உள்ளம் – இன்று
வேட்டையாடத் துணிந்ததுவோ?

க.நிறோஜலா
கரவெட்டி தெற்கு

### தர்ம யுத்தமா?

அம்புடன் வில்லேந்தி
ஆர்ப்பரிக்கும்
அரும்புகளே தர்ம
யுத்தத்தின் ஆரம்பமா?
பஞ்ச பாண்டவர்கள்
நீங்கள் எனில்
கூடவே இன்னும்
ஒருவரைக் காணோமே

த.பிருந்தன்

## மௌனத்தின் தேடல்- 23



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 11.06.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# வாகன இறக்குமதி வரி 50 வீதம் நீக்கம்; விலைகள் குறையும் என எதிர்பார்ப்பு



வாகனங்களுக்கான இறக்குமதி வரி 50 வீதத்தாலும், மின்சார உபகரணங்களின் மேலதிக வரி 15 வீதத்தாலும் குறைக்கப்பட்டுள்ளது. இந்த வரிக்குறைப்பு ஜூன் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளது.

வரிக் கட்டமைப்பை இலகுபடுத்தவும், பரந்துபட்டதுமாக்கும் நடவடிக்கையாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி சுங்கவரியின் மீதான 15 சதவீத மேலதிக வரியை நீக்கியுள்ளார். அத்துடன் பெரும்பாலான மூலப் பொருட்கள் மற்றும் இயந்திர வகைகள் மீதான 2.5 சதவீத இறக்குமதி வரியும் நீக்கப்பட்டுள்ளது. அதேவேளை

## சுங்க வரிகளிலும் தளர்வுகள்

சுங்க வரி 0 ,6 ,15 ,30 என்ற 4 கட்ட வரிக்கட்டமைப்பில் இலகுபடுத்தப்பட்டுள்ளது என நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் அறிக்கை ஒன்று கூறுகிறது.

சர்வதேச பிரபல்யம் பெற்ற விற்பனைப் பெயர்களை தாங்கியுள்ள பொருட்களுக்கு இலங்கையை கவர்ச்சிகரமான விற்பனை மையமாக உருவாக்கும் நோக்கில் தொலைபேசிகள், கைக்கடிகாரங்கள், கமராக்கள் மற்றும் இலத்திரனியல் பொருட்களின் ஒட்டுமொத்த வரி 10 வீதத்துக்கும் குறைவாக கொண்டு வரப்பட்டுள்ளது.

இத்தகைய பொருட்களுக்கு துறைமுக வரி மற்றும் நாட்டை நிர்மாணிக்கும் வரி ஆகியவை மட்டுமே விதிக்கப்படும். பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் மேலதிக வரி ஆகியவை இந்த பொருட்களுக்கு விதிக்கப்படமாட்டா.


இதேவேளை வாகன இறக்குமதி வரிகள் குறைக்கப்பட்டுள்ள நிலையில் வாகனங்களின் விலைகளில் குறைப்புகள் ஏற்படுத்தப்படும் என வாகன இறக்குமதி நிறுவனங்களின் நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

ரொயாட்டோ லங்கா நிறுவனம் தமது இறக்குமதி வாகனங்களின் விலைகள் குறையும் என தெரிவித்துள்ளது. எனினும் அதன் விபரங்களை உடனடியாக கணக்கிட முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளது.

எனினும் ஜப்பான் வாகனங்களின் விலைகள் உயர்ந்துள்ளமையால் விலைகள் குறைவதற்கான வாய்ப்புகள் இல்லை என தம்மிக்க மோட்டார்ஸ் நிறுவனம் தெரிவித்தது. இறக்குமதி தீர்வை தள்ளுபடி கனரக வாகனங்களின் விலைகளில் பாதிப்பை ஏற்படுத்தாது என்றும் அந் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. ஏ.எம்.டபிள்யூ. நிறுவனத் தகவல்படி, மாருதி சிற்றூர்தி 3 இலட்சத்தாலும், அல்டோ சிற்றூர்தி 8 இலட்சம் ரூபாயாலும் குறையும் என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. முச்சக்கர வண்டி விலைகள் குறையாது என டேவிட் பீரிஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த வரிக் குறைப்பின் படி, உதாரணமாக, அதன் பெறுமதியில் சுமார் 183 சதவீத இறக்குமதி வரி விதிக்கப்பட்டுவந்த இந்திய தயாரிப்பான மாருதி கார் ஒன்றுக்கு தற்போது 90 சதவீத வரி மட்டுமே அறவிடப்படும் என்று இலங்கையின் நிதிக் கொள்கைப் பணிப்பாளர் நாயகம் எஸ். ஆ. அட்டிகல தெரிவித்துள்ளார்.

இதேவேளை இவ் வரிக் குறைப்பு குறித்து ஊடகவியலாளர் மாநாடொன்றில் கருத்துத் தெரிவித்த இலங்கை வர்த்தக கைத்தொழில் சம்மேளனப் பிரதித் தலைவர் குமார் மல்லிமாராச்சி, இதுவரை வாகனங்களுக்கு அதிகளவான தீர்வை விதிக்கப்பட்டதால் வாகன இறக்குமதி குறைந்தே காணப்பட்டது. 2007-ல் 8 ஆயிரம் வாகனங்களே இறக்குமதி செய்யப்பட்டன. இப்போது தீர்வை குறைக்கப்பட்டுள்ளதால் 80 இலட்சம் ரூபாய் பெறுமதியான வாகனத்தை ஒருவர் 50 இலட்சத்திற்கே வாங்கிவிட முடியும். இது மற்றைய வாகனங்களுக்கும் பொருந்தும். இதனால் அதிகளவான வாகனங்கள் இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் என எதிர்பார்க்கின்றோம் என்றார்.



50 வீத வரிக்குறைப்பினால் வாகனங்களின் விலைகள் 25 வீதம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சம்மேளன உயர் அதிகாரி உதேசி கூறுகையில், பொதுவாக கைத்தொலைபேசிகள், கமராக்கள் , கைக்கடிகாரங்கள் போன்றவை அதிக தீர்வை காரணமாக டுபாய் , சிங்கப்பூரிலே கொள்வனவு செய்வதையே மக்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஆயினும் தீர்வை குறைக்கப்பட்டுள்ளதால் இங்கேயே சிக்கனமான விலையில் பெற்றுக் கொள்ள முடியும். அது மாத்திரமன்றி ஏனைய நாடுகளை நோக்கி அதிகம் செல்கின்ற இந்திய சுற்றுலாப் பயணிகளை இவ்வாறான சலுகைகள் மூலம் இலங்கையை நோக்கி கவர முடியும் என அரசாங்கம் கருதுகின்றது என்றார்.




## வர்த்தக செய்தித் துளிகள்

### பான் ஏசியா வங்கிக்கு புதிய தலைமை நிறைவேற்று அதிகாரி



பான் ஏசியா வங்கியின் தலைமை நிறைவேற்று அதிகாரியாக (CEO) சிரேஷ்ட வங்கியாளர் ரி.கிளாட் ஏ.பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார். வங்கித் துறையில் 38 வருட அனுபவம் கொண்ட இவர் கடன் மற்றும் சந்தைப்படுத்தலில் அதிக அனுபவம் கொண்டவர். ஓவசீஸ் ரஸ் வங்கி ,நேஷன்ஸ் ரஸ்ட் வங்கி ,எச்.என்.பி.மற்றும் மத்திய கிழக்கில் பிரிட்டிஷ் வங்கி போன்ற வங்கிகளில் பணியாற்றியுள்ளார்.

### மூன்றாமிடத்தில் இலங்கை

அமெரிக்கா, தென்கொரியாவுக்கு அடுத்து இலங்கையே பங்களாதேஷில் 3ஆவது பெரிய முதலீட்டாளர் என இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார். இலங்கை முதலீட்டாளர்கள் இறப்பர், ஆடைத் துறை, இரசாயனத் தொழில்களில் முதலிடுவதாகவும், இரு நாட்டுக்கும் இடையிலான வர்த்தகம் 19 மில்லியன் அ.டொலராக காணப்படுகின்றது, பங்களாதேஷில் தற்போது 2000 பேர் தொழில் புரிவதாகவும் மாதாந்தம் 400 பேரளவுக்கு விசா வழங்கப்படுவதாவும் தெரிவித்தார்.

### 70-வது ஆண்டில் த பினான்ஸ் கம்பனி

1940இல் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கையின் மிகப்பழமை வாய்ந்த நிதிக் கம்பனியான த பினான்ஸ் கம்பனி 70 வருட பூர்த்தியைக் கொண்டாடுகின்றது. இலங்கையிலேயே மிக அதிகளவான நிலையான வைப்புத் தொகையைக் கொண்ட, நாட்டின் மிகப்பெரும் வங்கியல்லாத நிதி நிறுவனமாக விளங்குகின்றது என கம்பனியின் பிரதம நிறைவேற்று அதிகாரி கமல் யட்டவர தெரிவித்தார்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 113.00 | 114.59 |
| பவுண்ட் (ஐக்கிய இராச்சியம்) | 164.83 | 168.24 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 136.89 | 140.20 |
| சுவிஸ் பிராங் | 97.07 | 100.06 |
| கனேடிய டொலர் | 107.58 | 111.10 |
| அவுஸ்திரேலிய டொலர் | 94.55 | 97.43 |
| சிங்கப்பூர் டொலர் | 80.12 | 82.03 |
| ஜப்பான் யென் | 1.21 | 1.24 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.45 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.93 | |



கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து கொழும்பு நகருக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள விசேட சொகுசு எக்ஸ்பிரஸ் புகையிரத சேவையை நாமல் ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்து, அதில் சம்பிரதாய பயணத்தை மேற்கொள்வதையும், புகையிரதத்தையும் படத்தில் காணலாம்.

## பங்குச் சந்தை விபரம்


(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/ குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 4354.20 | 21.91 |
| மிலங்கா விலைச்சுட்டி | 4968.34 | 49.70 |
| புரள்வு (ரூபா.மில்லியன்) | 2873.32 | |

***உயர்வடைந்த பங்குகள்*** : ஜோன் கீல்ஸ் ஹோல்டிங், சம்பத் வங்கி, டயலொக் ரெலிகொம் ,நேஷன்ஸ் ட்ரஸ்ட் ,ஈ.பி.சிறேசி கம்பனி.

***சரிவைக் காட்டிய பங்குகள்:*** த புக்கிட் ,சிலோன் ரொபாக்கோ கம்பனி, ஏசியன் ஹோட்டல்ஸ் & புறப்பட்டிஸ், நெஸ்ரல் லங்கா, கார்ஷன்ஸ்.

## ஒரு வினாடியில் செய்யும் தவறால் விளைவுகள்?



(மும்பை)

கடந்த திங்கட்கிழமையும், புதன் கிழமையும் இந்திய பங்குச்சந்தை (பி.எஸ்.சி) மேலேயே இருந்தாலும் செவ்வாய் கொடுத்ததை எல்லாம் அள்ளிக்கொண்டு சென்றுவிட்டது. செவ்வாய் அன்று அப்படி என்னதான் நடந்தது? ஐரோப்பிய சந்தைகள் தொடங்குவதற்கு சிறிது முன்பு, பங்குத் தரகர் ஒருவர், சந்தையில் ஐ.சி.ஐ.சி.ஐயின் பங்குகளை 840 ரூபாய் அளவில் விற்க நினைத்தார். ஆனால், பஞ்சிங் பண்ணும்போது விலை 840 ரூபாயைக் குறிப்பிட்டு விட்டு, ஐ.சி.ஐ.சி.ஐ.கோடுக்கு பதில் ரிலையன்ஸ் இன்டஸ்ரீஸ் கோடை பஞ்ச் செய்து விட்டார்.

இந்திய பங்குச்சந்தையின் ஜாம்பவானான ரிலையன்ஸ் இன்டஸ்ரீஸின் பங்குகள் அன்றைய தினம் 1040 ரூபாய் அளவில் விற்கப்பட்டு வந்த நிலையில், 840 ரூபாய் அளவில் தவறுதலாக பஞ்ச் செய்யப்பட்டதால் சந்தை ஒரு வினாடியில் 400 புள்ளிகளுக்கு மேல் இழந்தது.

இதனால் ரிலையன்ஸ் இன்டஸ்ரீஸ் நிறுவனப் பங்கு விலை 52 வாரங்களில் இல்லாத அளவுக்கு சரிந்தது. பின்னர் அது தவறுதலாக ஏற்பட்டது என்று தெரிந்தவுடன் சிறிது மேலே எழும்ப முயற்சித்தது. ஆனால், அதேசமயம் ஆரம்பித்த ஐரோப்பிய சந்தைகளில் பிரிட்டிஷ் பெற்றோலியம் பங்குகள் மிகவும் சரிந்ததை அடுத்து உலக அளவில் சந்தைகள் சரிய ஆரம்பித்தன.

ஒரு சிறு தவறுடன் ஆரம்பித்த சரிவு, ஒரு சமயத்தில் 626 புள்ளிகளை இழந்த சந்தை பின்னர் சுதாகரித்து இழந்ததில் சிறிது திரும்பப் பெற்று கடைசியாக 372 புள்ளிகளை இழந்து முடிந்தது.

இதேவேளை ,தங்கத்தின் விலை உயர்ந்து கொண்டே செல்கிறது. ஏறிய எல்லாம் இறங்கத்தான் வேண்டும். இதுதான் நியதி. ஆனால் எப்போது என்றுதான் தெரியவில்லை. ஒருகாலத்தில் கச்சா எண்ணெய் பரலுக்கு 130 டொலருக்கும் மேலே சென்று இறங்கியது போல தங்கம் உயர்ந்து கொண்டே செல்கின்றது.

## அதிக வேலைவாய்ப்பு அளிப்பதில் ஐ.ரி.,பீ.பி.ஓ. துறைகள் முன்னிலை

(புதுடில்லி)

சென்ற 2 காலாண்டுகளாக இந்தியாவில் வேலைவாய்ப்பு அளிப்பதில் தகவல் தொழில் நுட்பம்(IT) மற்றும் பீ.பி.ஓ.(BPO) துறை நிறுவனங்கள் முன்னிலை வகிக்கின்றன.

கடந்த டிசம்பர் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில் ஜவுளித்துறை, தோல்பொருள் தயாரிப்பு, உலோகம், மோட்டார் வாகனம், நவரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள், போக்குவரத்து, கைத்தறி, ஐ.ரி.மற்றும் பீ.பி.ஓ. ஆகிய எட்டுத் துறைகளில் 6.38 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு உருவாகியுள்ளது. இதில் ஐ.ரி.மற்றும் பீ.பி.ஓ.நிறுவனங்கள் மட்டும் 5.67 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளன.

இதேவேளை மார்ச் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில், ஐ.ரி. மற்றும் பீ.பி.ஓ. துறையில் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் பேருக்கு வேலை கிடைத்துள்ளது. சென்ற 2009-10ஆம் நிதி ஆண்டில் இத்துறையில் 6.9 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு உருவாகியுள்ளது. இத்துறையில் வேலைவாய்ப்பு அதிகரித்து வருவதுடன், பணியாளர்களுக்கு அதிக அளவில் ஊதிய உயர்வும் அளிக்கப்பட்டு வருவதாக தெரிகிறது.

கு.முருகதாஸ்

படிப்புகள் அனைத்திலும் அதி உன்னதமான படிப்பு மனிதன் எப்படி இருக்க வேண்டும்; எதைத் தேடவேண்டும் என்ற படிப்புத்தான் .

*~ பிளேட்டோ*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## நீந்தத் தெரியாத பண்டிதர்போல தமிழ்ச் சமூகம் துன்பத்தில் மூழ்கிறது

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குமிடையில் நாளை 7-ந் திகதி பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளதான தகவல்கள் வெளியாகின்றன.

நல்ல செய்தி. ஏற்கெனவே அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதன் பின் விரைவில் ஜனாதிபதி கூட்டமைப்புடன் சந்தித்துப் பேசுவார் என்ற தகவல் வெளியாகியிருந்தது.

இருந்தும் சந்திப்பிற்கான உத்தியோகபூர்வ அழைப்பு ஜனாதிபதியிடமிருந்து கிடைக்கவில்லை என்ற செய்திகளிடையே இப்போது, சந்திப்பிற்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவிற்குச் செல்வதற்கு முன்பாக சந்திப்பு இடம் பெறவுள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசு யாருடன் பேசினாலும் அது பற்றி தமிழ் மக்கள் கவலைப்படப்போவதில்லை. தமிழ் மக்களுக்குத் தேவை சுதந்திரமான - சகல உரிமைகளும் கொண்ட - எங்களை நாங்களே ஆளும் அதிகாரத்துடனான தீர்வு.

ஆனால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அரசு தங்களுடன் மட்டுமே பேசவேண்டும் என்பது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு.

தங்களின் இருப்பு, எதிர்கால அரசியல் நலன், தாமே பிரச்சினைக்குத் தீர்வு கண்டோம் என்ற வரலாற்று படைப்பு என்பவற்றிற்காக அவர்களிடம் அப்படியொரு எண்ணப்பாடு இருக்கிறது. பரவாயில்லை. யார் குற்றினாலும் அரிசியாகட்டும்.

அப்படியானால் இதை எழுதும் உங்களுக்கு என்ன பிரச்சினை என்ற கேள்வியை நீங்கள் எழுப்பவே செய்வீர்கள். இங்குதான் குழப்பம் ஏற்படுகிறது.

அதாவது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சந்திப்பை நடத்துவது இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவா?

அல்லது இந்தியா செல்லும்போது அவரிடம் அங்கு கேட்கப்படுகின்ற கேள்விகளைச் சமாளிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம் என்பதை கூறுவதற்காகவா?

இங்குதான் குழப்பம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அரசு எதைப்பேசினாலும் சரி. அதை தங்களுடன் பேசவேண்டும் என்பதுதான் முக்கியம்.

அரசுக்கு பேச்சுவார்த்தை நடத்துவதுபோல காட்டிக்கொண்டு தமிழர் பகுதியில் இருக்கக் கூடிய அத்தனை அரசமரங்களிலும் புத்தபிரானை பிரதிஷ்டை செய்வதுதான் நோக்கம்.

பாவம் தமிழ் மக்கள். அவர்கள் நன்மையும் தீமையும் அறியார். பாவமும் புண்ணியமும் அறியார். அசல் - நகல் அறியார். என்ன செய்வது! படித்த சமூகம் கடலில் நீந்தத் தெரியாத பண்டிதர்போல.

ஏட்டுக்கல்வியை மட்டும் வைத்துக்கொண்டு படித்த சமூகம் என்ற பகட்டில் துன்பத்தை அனுபவிக்கின்றது.

இறைவா ! இந்தத் துன்பக் கடலில் இருந்து தமிழ் மக்களை நீதான் மீட்டெடுக்க வேண்டும்.

# பொன்சேகாவை இராணுவச் சட்டத்தின் அடிப்படையில் கைது செய்ய முடியாது

## ஜனாதிபதி சட்டத்தரணி தெரிவிப்பு

இராணுவ சட்டத்தின் கீழ் ஜெனரல் சரத்பொன்சேகாவை கைது செய்ய முடியாதென ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட காலப்பகுதியில், அவர் இராணுவத்தின் நிலையான படைப்பிரிவில் கடமையாற்றவில்லை எனவும், இதனால் அவரை இராணுவச் சட்டத்தின் கீழ் கைது செய்ய முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சரத்பொன்சேகாவிற்கு எதிரான இரண்டாவது இராணுவ நீதிமன்றத்தை இரத்து செய்யுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

மேன்முறையீட்டு நீதவான்களான சத்யா ஹெட்டிகே, ரோஹினி மாரசிங்க மற்றும் சரத் டி ஆப்ரூ ஆகிய நீதவான்களினால் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது இராணுவச் சட்டங்கள் இராணுவத்தில் நிலையான கடமையில் ஈடுபடுவோருக்கு பொருந்துமே தவிர, ஏனையோருக்கு பொருந்தாது என சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 14 ஆம் திகதி ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவத் தளபதி பதவியிலிருந்து விலகியுள்ளதாகவும், அதன் பின்னர் கூட்டுப் படைகளின் பிரதான அதிகாரியாக செயற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே சரத்பொன்சேகாவை இராணுவச் சட்டத்தின் அடிப்படையில் கைது செய்து தடுத்து வைப்பது சட்டவிரோதமானதென அவர் வலியுறுத்தியுள்ளார். (6)

## பஸ் சேவைகள் சீரின்மையா?

## முறைப்பாடுகளை தெரிவிக்க தொலைபேசி இலக்கம் அறிமுகம்

பஸ் சேவைகளின் போது ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக முறைப்பாடு செய்வதற்கு இலங்கை போக்குவரத்து சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கு அமைவாக , 0117555555 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக மக்கள் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இதன் முதற்கட்டமாக , காலை 8.30 தொடக்கம் மாலை 5 மணிவரை முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இதன் கீழ் பஸ் சேவைகள் முறையாக நடைபெறாமை தொடர்பாகவும் சாரதி மற்றும் நடத்துநரின் பொறுப்பற்ற செயற்பாடுகளையும் முறைப்பாடுகள் செய்ய முடியும் என்றும் எரிபொருள் களவாடுதல் பஸ்களில் உள்ள உதிரிப் பாகங்களை அகற்றுவது போன்ற வேலைகளைச் செய்வது தொடர்பாகவும் இந்த தொலைபேசி ஊடாக அறிவிக்கலாம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

## மக்கள் வங்கியின் புதிய கிளைகள் திறப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரால் பரந்தன் , கிளிநொச்சி மற்றும் மாங்குளம் பகுதிகளில் நாளை திங்கட்கிழமை மக்கள் வங்கிக் கிளைகள் திறந்து வைக் கப்படவுள்ளதாக மக்கள் வங்கியின் வடவலய உதவிப் பொது முகாமையாளர் த.க. ஆனந்தராசா அறிவித்துள்ளார்.

இதில் பரந்தன் கிளை காலை 10.15 மணிக்கும் கிளிநொச்சிக் கிளை காலை 11.30 மணிக்கும் மாங்குளம் கிளை மாலை 3.45 மணிக்கும் திறந்து வைக்கப்படவுள்ளது எனவும் இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் தலைவர் டபிள்யூ. கருணாஜீவ, பிரதம நிறைவேற்று அதிகாரியும் பொது முகாமையாளருமான பி.வி. பத்திரண, மாவட்ட அரசாங்க அதிபர்கள் மற்றும் உள்ளூர் பிரமுகர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக அவர் அறியத்தந்துள்ளார். (6)

## கலந்துரையாடல்

1996,1997 ஆம் ஆண்டுகளில் யாழ். குடாநாட்டில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் ,தங்கியிருப்போர் போன்றோரின் முன்னேற்றத்துக்காகவும் உதவிகள் வழங்குவதற்காகவும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் குடாநாட்டை பிரதி நிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரை சந்திப்பது தொடர்பான , காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று ஆரியகுளம் , உயர்பட்டப்படிப்புகள் கல்லூரியில் நாளை பிற்பகல் 4 மணியளவில் இடம்பெறவுள்ளது. (6)

## வரி வருமானத்தை அதிகரித்துக்கொள்ளும் நோக்கிலேயே வாகன வரி குறைப்பு

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

வரி வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில் அரசாங்கம் வாகன இறக்கு மதிவரியை குறைத்துள்ளதாக ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.


லொத்தர் சீட்டுக்களில் ஜெக்பொட் முறைமையைப் போன்று வரி வருமானத் தைக் கூட்டும் நோக்கில், அரசாங்கம் இறக் குமதி வரியை குறைத்துள்ளதாக ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப் பினர் சுனில் ஹந்து நெத்தி தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

அதிகளவு வாகனங்கள் இறக்குமதி செய்யப்படாத கூடிய வாய்ப்புக் காணப்படுவ தாகவும், இதனால் அரச வரி வருமானம் அதிகரிக்கும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுமக்களுக்கு நிவாரணங்களை வழங்க வேண்டுமென அரசாங்கம் நினைத் தால், அத்தியாவசிய பொருட்களுக்கே வரிச் சலுகை அளித்திருக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

# உணவா? உணர்வா?



கொடுமையிலும் பெரியகொடுமை பசிக்கொடுமை. இந்தப்பசி உணர்வு மட்டும் மனிதனுக்கு இல்லை என்றால் அவன் யாரையும் ஏன் கடவுளையுமே தூக்கி எறிந்துவிட்டு தன்னந்தனிக்காட்டு ராஜாவாக மண்ணில் உலாவருவான்.

ஆனால், என்ன செய்வது, மனிதன் இப்படிச் செய்வான் என்று எண்ணித் தானோ என்னவோ கடவுள் பசி உணர்வை மனிதருக்குள் ஒளித்து வைத்திருக்கின்றார். இந்த பசியை அடக்குவது உணவு. இந்த உணவை அளிப்பவர் கடவுள். இந்த உணவுதான் மனிதனின் மூன்று அடிப்படைத் தேவைகளுள் ஒன்று.

இந்த உணவைப் பெறுவதற்காக கடவுள் மனிதனுக்கு இயற்கை வளங்களையும் அந்த வளங்களை பயன்படுத்துவதற்காக உழைப்பையும் கொடுத்திருக்கின்றார். ஆனால் பல மக்களுக்கு உழைப்பதற்கு வாய்ப்பில்லை; அப்படியே கடுமையாக உழைத்தாலும் உழைப்பின் முழுப்பலனை அனுபவிக்க உரிமை இல்லை.

## பரமபிதா காட்டிய பாதை

இந்த நிலை மாறும் நாள் எந்நாளோ? ஆம், இன்று நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம். இந்த விழாவாவது நாம் எழுப்பிய கேள்விக்கு விடை தருமா?

ஆம், தரவேண்டும். இல்லையென்றால் இந்த விழாவிற்கு அர்த்தமும் இல்லை, பொருளும இல்லை. அப்படியென்றால் இந்த விழா நமக்குக் கூறும் செய்தி என்ன?

இருப்பதைப் பகிர்ந்திடு, பகிராத உணவும் பதுக்கிய பொருளும் நிலைக்காது. ஆம், இறைவனால் அளிக்கப்பட்ட வளங்களை பதுக்கியும் சுரண்டியும் வாழ்கின்றவனுக்கு அழிவே நிச்சயம் என்று ஆண்டவர் இயேசு சொல்கின்றார்.

**அறிவிலியே, இன்றிரவே உன் உயிர் உன்னை விட்டு பிரிந்துவிடும். அப்பொழுது நீ சேர்த்து வைத்தது யாருடையவை ஆகும். (லூக் 12:20)** அடுத்து பகிர்ந்து வாழும்போதுதான் மகிழ்ச்சி உண்டாகும். பதுக்கி வாழ்கின்றபோது பயம்தான் உண்டாகும்.

அடுத்து உணவு அல்ல உணர்வே பெரிது. அழுவாரோடு அழுங்கள். மகிழ்வாரோடு மகிழுங்கள் என்று ஆண்டவர் இயேசுவே கூறியிருக்கின்றார். அப்படியென்றால் பசியாய் இருப்பவனுக்கு உணவைக் கொடுப்பதல்ல பெரிது. மாறாக அந்த மனிதனுடைய பசி உணர்வை நமது உணர் வாகக் கொள்ள வேண்டும். அவனுடைய துன்ப உணர்வில் நாமும் கலக்க வேண்டும். அப்போது தான் நாம் கொடுப்பதற் கும் அர்த்தம் பிறக்கும்.

இன்றைய நற்செய்தியில் இதைத்தான் நாம் பார்க்கின்றோம். ஆம், உணவை விட உணர்வே பெரிது. நம் எண்ணம் எப்படி? இயேசுவின் எண்ணமா? அல்லது சீடர்களின் எண்ணமா? இயேசுவின் எண்ணம் என்றால் நாமும் இயேசுவைப் போன்று ஏழை எளிய மக்கள் மீது அக்கறையும் கரிசனையும் கொள்வோம். அவர்களுடைய வேதனை உணர்வுகளில் இரண்டறக் கலப்போம்.

*ஜோன் ரொபேர்ட்*
















யாழ்.மாவட்ட கல்வி வலயங்கள், உள்ளூராட்சி திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஆகியன இணைந்து நடத்திய உலக சுற்றாடல் தின நிகழ்வை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைப்பதையும் சுற்றாடல் விழிப்புணர்வு ஊர்வலத்தில் பங்குபற்றிய ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களையும் விழிப்புணர்வு ஊர்தியையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாண கல்வியமைச்சின் செயலர் எல்.இளங்கோவன் ஆகியோர் இணைந்து சிறுமியொருவருக்கு வலுவிழந்தோருக்கான முச்சக்கரவண்டியை கையளிப்பதையும் அதிபர் ஒருவருக்கு கணனி வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார்)

## நைஜீரியாவில் தங்க சுரங்கத்தில் விபத்து; 100 குழந்தைகள் உட்பட 160 பேர் பலி

(லாகோஸ்)

ஆபிரிக்காக் கண்டத்திலுள்ள நைஜீரியா நாட்டில் தங்கம், தாமிரம் உள்ளிட்ட கனிம வளங்கள் உள்ளது. இங்கு சுமார் 15 கோடி மக்கள் வாழ்வதுடன் இங்குள்ள ஷாம்பரா மாகாணத்தில் சாஹெல் என்ற பாலைவன பகுதியும் உள்ளது. இப்பகுதியில் பல தங்க சுரங்கங்கள் உள்ளன. இங்கு காரிய விஷ வாயு கசிவு ஏற்பட்டதால் தங்க சுரங்கங்கள் மூடப்பட்டு பாதுகாப்பு இடப்பட்டது.

இந்த நிலையில் 5 கிராமங்களைச் சேர்ந்த ஏழைக் குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் தங்க சுரங்கங்களுக்குள் புகுந்து பாறைகளில் திருட்டு தனமாக தங்கத்தை வெட்டி எடுத்தனர்.

இந்த நிலையில் சுரங்கங்களில் திருட்டு தனமாக தங்கத்தை வெட்டி எடுத்தவர்களில் 300 பேருக்கு உடல் நலக்கோளாறு ஏற்பட்டது.

காரணம் காரீயம் மூளை மற்றும் நரம்பு மண்டலத்தை பாதிக்கும் தன்மை கொண்டது. படிப்படியாக நினைவாற்றலை இழக்க செய்து உடல் உறுப்புக்களை செயல் இழக்கச் செய்து முடிவில் உயிரை பறித்து விடும் தன்மை கொண்டது. இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு நைஜீரியாவில் உள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி 160 பேர் உயிரிழந்தனர். இவர்களில் 100 பேர் குழந்தைகள் மற்றவர்களின் நிலைமையும் கவலைக்கிடமாக உள்ளது எனக் குறிப்பிடப்படுகிறது.

## அவுஸ்திரேலிய கடற்பரப்பில் வைத்து மேலும் இரு அகதிகள் படகுகள் முற்றுகை

(கொழும்பு)

அவுஸ்திரேலியக் கடற்பரப்பில் வைத்து மேலும் இரு அகதிகள் படகுகள் முற்றுகையிடப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய உள்விவகார அமைச்சு செய்தி வெளியிட்டுள்ளது.

முற்றுகையிடப்பட்ட முதலாவது படகில் 54 அகதிகளும் இரண்டாவதாக முற்றுகையிடப்பட்ட படகில் 28 அகதிகளும் பயணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விரு படகுகளிலும் இலங்கை அல்லது ஆப்கானிஸ்தான் நாடுகளைச் சேர்ந்த அகதிகளே பயணித்திருக்கலாமென அவுஸ்திரேலியா அரசு சந்தேகம் தெரிவித்துள்ளதுடன்,

முற்றுகையிடப்பட்டுள்ள இரு படகுகளிலும் பயணித்த அகதிகள் கிறிஸ்மஸ் தீவிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய உள்விவகார அமைச்சகம் மேலும் கூறுகின்றது.

இந்த நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் முதல் இதுவரையிலான காலப்பகுதியில் சுமார் 750 அகதிகள் படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவிற்குள் ஊடுருவ முயற்சித்து கைது செய்யப்பட்டு கிறிஸ்மஸ் தீவுகளிலுள்ள முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. ஆகையால் தஞ்சம் கோரும் அகதிகளின் விண்ணப்பங்கள் ஏற்பதை கடந்த ஏப்ரல் மாதம் முதல் அவுஸ்திரேலியா தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

## சடலத்தை இனங்காட்டுமாறு பொலிஸார் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)



யாழ். மத்திய கல்லூரிக்கு முன்பாக கடந்த திங்கட்கிழமை இரவு 9 மணியளவில் முதியவர் ஒருவரின் சடலம் யாழ் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

சுமார் 73 வயது மதிக்கத்தக்க முதியவர் நீல நிறத்தில் கறுப்பு நிறக் கோடு இடப்பட்ட சாரமும் வெள்ளை நிறத்தில் கறுப்பு நிறக் கோடு உடைய சேட்டும் அணிந்த நிலையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதால் உறவினர்கள் அடையாளம் காட்டி சடலத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். பொலிஸார் தெரிவித்துள்ளனர். (6-7)

## உடற்கல்வி உதவிக் கல்வி பணிப்பாளர் நியமனம்

(வேலணை)

தீவக கல்வி வலயத்தின் உடற்கல்வி உதவிக் கல்வி பணிப்பாளராக நாகலிங்கம் லோகநாதன் நியமனம் பெற்றுள்ளார்.

இவர் முன்பு யாழ்/ காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி மற்றும் யாழ்/ வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் உடற்கல்வி ஆசிரியராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (6-22)

## புதிய பொலிஸ் நிலையம் திறக்கப்படவுள்ளது

(வேலணை)


காரைநகர் பிரதான தபாலகத்திற்கு முன்பாகவுள்ள காணியில் புதிதாக பொலிஸ் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. இவ் பொலிஸ் நிலையமானது. இம்மாதம் நடுப்பகுதியில்திறக்கப்படவுள்ளது.

இதுவரைகாலமும் காரைநகர் மக்கள் தமது முறைப்பாடுகளையும் பொலிஸ் நிலையத்தில் ஆற்ற வேண்டிய கருமங்களுக்கும் ஊர்காவற்றுறை காவல் பணிமனையையே நம்பியிருந்தனர். இனிவரும் காலங்களில் இச்சிரமம் ஏற்படாது என பொதுமக்கள் நம்புகின்றனர். (6-22)

## புதிய கட்சிப் பதிவு விண்ணப்பம் 30 ஆம் திகதி வரை ஏற்கப்படும்

புதிதாக அரசியல் கட்சிகளைப் பதிவு செய்ய விரும்புவோர் இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்க வேண்டுமெனத் தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

விண்ணப்பங்கள் யாவும் தேர்தல்கள் மேலதிக ஆணையாளர் டபிள்யூ. பீ.சுமணசிறிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுவதுடன் நேரிலும் கையளிக்கலாமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)



# சாண்டிமல் சதமடித்து சாதித்தார்

# இலங்கை அணி அபார வெற்றி; இந்தியா தொடரிலிருந்து அவுட்

(ஹராரே)

சாண்டிமல்லின் சிறப்பான சதத்தின் மூலம் இலங்கை அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இந்திய அணியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

இலங்கை சிம்பாவே மற்றும் இந்திய அணிகள் மோதும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர் சிம்பாவேயில் நடைபெற்று வருகிறது.

இதில் முதல் சுற்றின் 5ஆவது போட்டி நேற்று ஹராரேயில் நடைபெற்றது. இப் போட்டியில் இலங்கை-இந்திய அணிகள் மோதின இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணித்தலைவர் திலகரட்ண டில்சான் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களையிழந்து 260 ஓட்டங்களை எடுத்தது இதில் வீராட் ஹோலி 95 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 68 ஓட்டங்களையும் யூசுப்பதான் 41 பந்துகளில் (6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட)44 ஓட்டங்களையும் அஸ்வின் 32 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 38 ஓட்டங்களையும் ரோகித்சர்மா 32, தினேஷ்கார்த்திக் 27 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் திலான்துஷார 3 விக்கெட்டுக்களையும் ரான்டீவ் 2 விக்கெட்டுக்களையும் குலசேகர, பெரேரா, டில்சான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 269 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சாண்டிமல்லின் சிறப்பான சதத்தின் மூலம் 48.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களைமாத்திரமிழந்து 270 ஓட்டங்களைப் பெற்று 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதில் தான் விளையாடிய இரண்டாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் சாண்டிமல் 118 பந்துகளில் (6 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அடங்கலாக) 111 ஓட்டங்களை குவித்து கன்னிச்சதத்தைப் பூர்த்திசெய்தார்.

இவருடன் கபுகெதர 42, ஜீவன் மென்டீஸ் 35, சமரவீர 28, தரங்க 27 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் அஸ்வின் 2 விக்கெட்டுக்களையும், டின்டா, ஓஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் இலங்கை அணி தான் விளையாடிய மூன்றாவது போட்டியில் 2ஆவது வெற்றியைப்பெற்று தொடரை 9 புள்ளிகளுடன் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

அத்துடன் சிம்பாவே அணியும் 9 புள்ளிகளுடன் இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. இதேவேளை தொடரில் தான் விளையாடிய 4ஆவது போட்டியில் இந்திய அணி 3ஆவது தோல்வியை சந்தித்து வெளியேறியது.

# உலகக்கிண்ண தொடரிலிருந்து விலகல் டேவிட் பெக்கம் ரசிகர்கள் சோகம்

இங்கிலாந்து அணியின் நட்சத்திர வீரராக ஜொலிக்கிறார் டேவிட் பெக்கம். அடிக்கடி ஹேர் ஸ்டைலை மாற்றும் அவர் ரசிகர்களின் உள்ளம் கவர்ந்த நாயகனாக திகழ்கிறார். விளம்பர மொடலாக கொடி கட்டிப்பறக்கும் இவர் இம்முறை காயம் காரணமாக உலகக் கோப்பை தொடரில் பங்கேற்க இயலாது என்பது சோகமான விடயம்.

கடந்த 1975இல் லண்டனில் பிறந்தார் டேவிட் பெக்கம். தற்போது மிலன் கழக அணி சார்பில் விளையாடி வரும் இவர் சம்பியன்ஸ் லீக் போட்டியில் 100 போட்டிகளுக்கு மேல் விளையாடிய முதல் இங்கிலாந்து வீரர் என்ற சாதனை படைத்துள்ளார்.

கடந்த 1991ஆம் ஆண்டில் மான்செஸ்டர் யுனைடெட்கழக அணியில் கால்பந்து பயிற்சிக்காக சேர்ந்த இவர் தனதுதிறமையால் அணித் தலைவர் அந்தஸ்திற்கு உயர்ந்தார். பின் கடந்த 2007இல் லாஸ் ஏஞ்சல்ஸ் காலக்ஸி அணி சார்பில் ஒப்பந்தம் செய்யப்பட்டார். தற்போது மிலன் அணி சார்பில் விளையாடி வருகிறார்.

கழக அணியில் அசத்திய பெக்கமை கடந்த 1996ஆம் ஆண்டு முதன்முதலில் இங்கி லாந்து அணியில் விளையாட அனுமதிக்கப் பட்டார். பின் கடந்த 1998இல் பிரான்சில் நடந்த உலகக்கோப்பை தொடரில் இங்கிலாந்து அணியில் இடம் பிடித்தார்.


இத்தொடரில் ஆர்ஜென்டீனா அணிக்கு எதிரான போட்டியில் ஆர்ஜென்டீனாவின் சிமியோனை தற்செயலாக உதைக்க நடுவரால் ரெட்கார்டு கொடுக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார். இத்தவறுக்காக கடுமையாக விமர்சிக்கப்பட்ட பெக்கம் தனது திறமையான ஆட்டத்தால் இங்கிலாந்து அணியின் தலைவர் பதவியை பெற்றார்.

கடந்த 2002, 2006ஆம் ஆண்டு நடந்த உலகக்கோப்பை தொடரில் இவரது அபார ஆட்டம் இங்கிலாந்து அணி காலிறுதி வரை முன்னேற உதவியது. இம்முறை கணுக்கால் காயம் காரணமாக உலகக் கோப்பை தொடரில் பங்கேற்க மாட்டார். ஆனாலும் தென்னாபிரிக்கா சென்று சக வீரர்களை உற்சாகப் படுத்த உள்ளார். இங்கிலாந்து அணிக்காக இது வரை 115 சர்வ தேச போட்டிகளில் விளையாடியுள்ள பெக்கம் 17 கோல்கள் அடித்துள்ளார்.

# ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணத்துக்கான இறுதிப்போட்டி இன்று யாழ்.இந்துவில்



சிறி காமாட்சி சனசமூக நிலைய விளை யாட்டுக்கழகம்



யாழ்.மத்திய விளையாட்டுக்கழகம்

**சிறி காமாட்சி சனசமூக நிலைய விளை யாட்டுக்கழகம்**

டாக்டர் கே.மோகனகுமார் (அணித்தலைவர்), டாக்டர் ரி.திலிபன் (உபதலைவர்), பி.வசிகரன், எஸ்.றம்மியராகுலன், எ.ஜெயரூபன், எஸ்.நிரோஜன், எஸ்.நிருஷன், பி.சஞ்சீவன், ரி.பவித்திரன், ரி.அரவிந்தன், ஜே.ரதீஷன், எஸ்.நிஷாந்தன், என்.ஜனார்த்தனன், கே.செல்ரன், கே.றொஹான், பி.வசீகரன் (பயிற்றுவிப்பாளர்), ஆர்.திரேஸ்குமார் (முகாமையாளர்).

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஈ.எஸ்.பேரம்பலம் நிறுவனத்தின் ஆதரவுடன் 28ஆவது வருடமாக நடத்திவரும் மட்டுப்படுத்தப்பட்ட 40 பந்து பரிமாற்றங்களைக்கொண்ட

**யாழ்.மத்திய விளையாட்டுக்கழகம்**

எ.ஜசிந்தன் (அணித்தலைவர்), வி.ரஜீவ்குமார், எஸ்.விமல்காந், வி.கபில்தேவ், டி.சுதர்ஷன், சி.றஜீவ், பி.சலிஸ்ரன், கே.கலிஸ்ரன், எஸ்.சத்தியன், எஸ்.சுவதீஸ, பி.பாலேந்திரா, எஸ்.சுரேஸ்ராஜா, எஸ்.வேணுதர்ஷன், சிவசங்கர், சசிகாந், எஸ்.விமலதாசன் (முகாமையாளர், பயிற்றுவிப்பாளர்)

இறுதி ஆட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரிமைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகமும், சிறி காமாட்சி சனசமூக விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. இப் போட்டிக்கு பிரதம விருந்தினராக தீவகம் தெற்கு வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக ஈ.எஸ்.பேரம்பலம் நிறுவனத்தின் இயக்குநர் ஈ.எஸ்.பி. நாகரத்தினமும் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் போசகரும் யாழ்.இந்துக்கல்லூரி அதிபருமாகிய வி.கணேசராசா ஆகியோரும் கலந்து சிறப்பிக்கிறார்கள்.

சிறந்தவீரர்களுக்கான பரிசில்களை பிரதம விருந்தினரின் துணைவியார் திருமதி நந்தகோபாலன் வழங்கி கௌரவிப்பார்.

மேற்படி வெற்றிக்கிண்ணத்துக்கான சுற்றுப்போட்டியில் 15 கழகங்கள் பங்குபற்றின. யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் காலிறுதிப் போட்டியில் ஸ்ரான்லி விளையாட்டுக் கழகத்தையும் அரையிறுதிப் போட்டியில் கே.சீ.சீ.சீ. விளையாட்டுக்கழக அணியையும் வென்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகினர்.

சிறி காமாட்சி சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி காலிறுதிப்போட்டியில் ஜொலிஸ்ரார் அணியையும் அரையிறுதிப் போட்டியில் அரியாலை சென்றல் அணியையும் வென்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகினர். இவ்விரு அணிகளும் 28 வருடங்களாக நடைபெற்று வரும் இச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் கலந்துகொள்ளாத அணிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி வெற்றிக்கிண்ணத்தை சென்றலைட்ஸ் அணி 1983, 1989, 1993 மற்றும் 1994ஆம் ஆண்டுகளிலும் ஜொலிஸ்ரார்ஸ் அணி 1984, 2001ஆம் ஆண்டுகளிலும், ஜொனியன்ஸ் அணி 1988, 1990, 1992, 1995ஆம் ஆண்டுகளிலும் சப்றா அணி 1991ஆம் ஆண்டிலும் கே.சீ.சீ.சீ. அணி 1998, 2004ஆம் ஆண்டுகளிலும் யங்ஸ்ரார் அணி 2003, 2005ஆம் ஆண்டுகளிலும் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஆர்ஜென்டீனாவுக்கு முதல் கோப்பை



பதினொராவது உலகக்கிண்ண கால் பந்தாட்ட தொடர் கடந்த 1978ஆம் ஆண்டு ஆர்ஜென்டீனாவில் நடைபெற்றது. இத்தொடர் சர்ச்சை மிகுந்ததாக இருந்தது.

காரணம் ஆர்ஜென்டீனாவில் இராணுவ ஆட்சி புரிந்து வந்த ஜெனரல் விடேலா வின் சர்வாதிகாரப்போக்கு மற்றும் மனித உரிமை மீறலைக் கண்டித்து பல நாடுகள் தொடரை புறக்கணிக்க முடிவு செய்தன.

எனினும் இப்பிரச்சினையில் சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (பீபா) தலையிட்டு சமரசம் செய்து வைக்க பெரும்பாலான நாடுகள் பங்கேற்க சம்மதம் தெரிவித்தன.

தகுதிச் சுற்றுப்போட்டிகளின் முடிபில் முன்னணி அணிகளான இங்கிலாந்து, சோவியத்யூனியன், சைக்கோஸ்லாவேகியா, யூகோஸ்லாவியா, பிரான்ஸ் ஆகிய அணிகள் வெளியேறின. ஈரான், துனிசியா அணிகள் உலகக் கிண்ணக்கால்பந்தாட்டத்தொடரின் முதன் முறையாக காலடிவைத்தன.

இத் தொடரில் நெதர்லாந்து அணி அபார ஆட்டத்தை வழிப்படுத்தி அசத்தியது. முதல் சுற்று முடிபில் இத்தாலி, நெதர்லாந்து பிரேசில், மேற்கு ஜேர்மனி, ஆஸ்திரியா, ஆர்ஜென்டீனா, போலந்து, பெரு ஆகிய அணிகள் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறின.

சொந்த மண்ணில் தொடரில் பங்கேற்ற ஆர்ஜென்டீனா அணி போலந்து, பெரு அணிகளை வீழ்த்தியது. இரண்டாவது சுற்றின் முடிபில் ஆர்ஜென்டீனா, பிரேசில் அணிகள் தலா 5 புள்ளிகளைப்பெற்று சமநிலையில் இருந்தன.

இதனால் அதிக கோல் அடித்த அணி என்ற அடிப்படையில் ஆர்ஜென்டீனாவுக்கு இறுதிப்போட்டியில் விளையாடும் வாய்ப்பு வழங்கப்பட்டது. மறுமுனையில் ஆஸ்திரியா, இத்தாலி அணிகளை வென்ற நெதர்லாந்து அணி உலகக்கிண்ண வரலாற்றில் இரண்டாவது முறை இறுதிப் போட்டி வாய்ப்பைப் பெற்றது.

இறுதிப் போட்டியில் ஆட்டநேரமுடிபில் ஆர்ஜென்டீனா, நெதர்லாந்து அணிகள் தலா ஒரு கோல் அடித்து சமனிலையைப் பெற் றது.

இதனால் வெற்றியாளரை தீர்மானிக்க மேலதிக நேரம் வழங்கப்பட்டது. இதில் ஆர்ஜென்டீனாவின் மரியோ கெம்பஸ், பெர்டோனி தலா ஒரு கோல் அடித்து அசத்தின.

இறுதியில் ஆர்ஜென்டீனா அணி 3-1 என்ற கோல்கணக்கில் நெதர்லாந்து அணியை வீழ்த்தி முதன்முறையாக உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றியது.

மூன்றாவது இடத்துக்கான போட்டியில் பிரேசில் அணி 2-1 என்ற கோல்கணக்கில் இத்தாலி அணியை வீழ்த்தியது. இத் தொடரில் 6 கோல்கள் அடித்து அசத் திய ஆர்ஜென்டீனா வீரர் மரியோ கெம்பஸ் தங்கப்பாதணி (கோல்டன் ஷூ) விருதை வென் றார்.

**துளிகள்**

சொந்தமண்ணில் உலகக்கோப்பைத் தொடரை நடத்தி சம்பியனான அணிகள் வரிசையில் 5ஆவது இடத்தைப்பிடித்தது ஆர்ஜென்டீனா.

இதற்கு முன்னர் உருகுவே (1930), இத்தாலி (1934), இங்கிலாந்து (1966), மேற்கு ஜேர்மனி (1974) அணிகள் பெருமை பெற்றது.




## ஹெல உறுமயவின் ஆலோச...

மாவட்டத்தின் எருவில் பிரதேச பொதுமக்க ளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அம் மாவட்டத்தில் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் அனைவருக்கும் பெருவிழா எடுக்கப்பட்டது.

இதில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டிருக் கும் சீனித்தம்பி யோகேஸ்வரன், பொன். செல்வராசா, பா.அரியநேத்திரன் ஆகியோ ரும் கலந்து கொண்டனர். அங்கு பேசும் போதே அவர் இவ்வாறு ஜாதிக ஹெல உறும யவுக்குப் பதிலடி கொடுத்தார்.

இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் பௌத்த மத குரு மார் கருத்துக்களை வெளியிடுகின்றமையே அந் நாட்டின் மிகப் பெரிய சாபக் கேடாகும்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகிய கூட்ட மைப்பினருக்குத் தமிழர் பிரச்சினையை எப் படிக் கையாள வேண்டும் என்று நன்றாகவே தெரியும்.

ஜாதிக ஹெலஉறுமய எங்களுக்குச் சொல்லித் தரத் தேவையில்லை. எங்களை அச்சுறுத்துகிறார்கள் என்பதற்காக நாம் வாயை மூடிக் கொண்டு இருக்க மாட்டோம் என்றும் அவர் தனது உரையில் தெரிவித் தார். (ச–5)


**மானிப்பாயில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!**

**Diploma in Mobile Phone Repairing**
**(Software & Hardware Repairing)**
(பல புதிய விடயங்களுடன்)

சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார்கற்கை நெறி !!!

பெண்களுக்கான தனிப்பிரிவுகளும் ஆரம்பமகவுள்ளதால் பெண்களும் இக் கற்கைநெறியில் பங்குபற்றலாம்

- காலம் 2 மாதங்கள் -

பதிவுகளை :- 10/06/2010 முன்னர் மேற்க்கொள்ளவும் !!

விபரங்களுக்கு : UNI - TECHNOLOGY
ICT Education Trainers
Jaffna Road, Manipay.
T.P No : - 021 - 7429325 / 0777 110862 (சி-383)


## இந்தியாவின் யோசனைக்கு...

படவில்லை.

இலங்கை அரசியல் மற்றும் பொருளா தார நிலைமைகள் குறித்து நடைபெறவுள்ள சில பேச்சுக்களில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியா செல்ல வுள்ளார்.

அதேபோல் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார். இருவரும் இந்திய அரசாங் கப் பிரதிநிதிகளுடனான பேச்சுவார்த்தைக ளில் கலந்து கொள்ளவுள்ளதாக நம்பத் தகுந்த தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பந்தன் முன்வைத்துள்ள தீர்வு யோச னைகளை ஏற்றுக் கொள்ள அரசாங்கம் உறுதியளித்துள்ளதாகவும் ராஜபக்ஷ அரசாங் கத்தின் இருப்பை உறுதிப்படுத்தும் வகையி லான அரசியல் சாசனத் திருத்தத்திற்கு இந் தியா பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் இந்த உறுதி மொழி வழங்கப்பட்டுள்ளதாக வும் லங்கா இரிதா தெரிவித்துள்ளது.

அத்துடன் எதிர்ப்புக்களைச் சமாளிப்ப தற்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவதாக சம்பந்தனும் உறுதி வழங்கி யுள்ளார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின் றன.

இதன் காரணமாகவே அரசியல் சாசனத் திருத்தம் தொடர்பில் இலங்கை மீது இந்தியா வின் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படவில் லை எனச் சம்பந்தன் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்ததாகவும் லங்கா இரிதா பத்தி ரிகை மேலும் கூறியுள்ளது. (ச–5)

## வடக்கு...

பிடிப்பது மிகவும் இலகுவானது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் குறைகளைக் கண்டு பிடிப்பதில் அதிக ஆர்வம் காட்டாது தமிழ் மக்களது பிரச்சினைக்குத் தீர்வு காணும் நடவடிக்கைகளில் முனைப்புக் காட்ட வேண் டும்.

வடக்குக் கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப் பட்டமைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளே பொறுப்பு. இரண்டு மாகா ணங்களாகச் செயற்படுவதில் தவ றில்லை.

இரண்டு மாகாண அலகுகளாக இயங்குவதன் மூலம் அதிகளவு வளங்களை ஒதுக்கீடு செய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மக்களின் மீள்குடியேற்ற நடவ டிக்கைகள் குறித்து தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச–5)


**நியூசிற்றி ரேடர்ஸ் இடமாற்றம்**

சொனி,பனசொனி சொனிக்கா றேடியோ,கசற் றெக்கோடர்,கார் றேடியோ, கார் ஸ்பீக்கர் ,14,21" சொனி ,பனசொனி கலர் ரீவிகள் ,டிஸ் ரீவி றிஜிபர்கள் சொனி ,பனசொனி ,எல்.ஜி.,நியூ ஒசாகி ,பைனியர் டிவிடி பிளேயர்கள், பூவர், பவல்ஸ் ,அம்பிளிவயர் 2,4 மெமறிக்காட் என்பவற்றை ஒரே கூரையின் கீழ் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளவும், அவற்றை சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும் நாடவேண்டிய ஒரே இடம்தான்

**நியூசிற்றி ரேடர்ஸ்**
(சி-382) **319-A கே.கே.எஸ்.றோட் ,யாழ்ப்பாணம்.**



The Annual General Meeting of Jaffna College Alumni Association

The above meeting will be held on the 25th **June 2010** at 9:30 am in **Ottley Hall**. Your presence is very much appreciated.

Annual General Meeting Agenda

- Prayer
- Minutes of the last Ex.Co meeting
- Secretary's Report
- Treasurer's Report
- Principal's Report
- Election of new Office bearers
- Any Other Business

**Hony.Secretary** (C-370)



**புதிய குளோபல் ஸ்ரார்**
இல.226, பல்கலைக்கழக அருகாமை,
இராமநாதன் வீதி.

மெது நிறுவனத்திற்கு கீழ்காணும் பணிகளுக்கு பணியாளர்கள் தேவை

➧ கணனி ரைப்பிங் ➧ போட்டோப் பிரதி இயக்குநர்

(ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

மேல் காணும் பணிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் நேரடியாக அல்லது 021 222 6951, 077 9522444, தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (1637)


## இனப் பிரச்...

மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயம் நிறைவடைந்த தன் பின்னர் இலங்கையில் உள்ள அனைத்துச் சிறுபான்மைக் கட்சிக ளும் இந்தியாவுக்கு அழைக்கப் பட்டு இது குறித்துப் பேச்சுவார்த் தை முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல்கள் தனித்தனியாக இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதன்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்கு முதலில் அழைப்பு விடுக்கப்படும் எனவும் அதன் பின்னர் ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடப் படும் எனவும் கூறப்படுகின்றது.

இந்தப் பேச்சுவார்த்தையில் மலையகக் கட்சிகளும் இணைத் துக் கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை இந்தியாவின் இந்த நேரடித் தலையீட்டை ஏனைய பெரும்பான்மைக் கட்சிகள் எதிர்க் கக் கூடும் என அரசியல் அவதா னிகள் கருத்துத் தெரிவித்துள்ள னர். (ச–3,5)


INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Sri Lanka.
Under the purview of the
**Ministry of Technology and Research**

MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, Sri Lanka.
Office : 021 222 3641
Fax : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**Diploma Courses**
- Diploma in DTP
- Diploma in MS Office
- Diploma in Hardware Technology

**On-Line Class**
- Diploma in PC Application & Office Management (MS Office syllabus included)

**Work Shop Classes**
- PC Maintenance & Hardware
- Adobe Photoshop

**Certificate Courses**
- MS Word
- MS Excel
- MS Access
- CorelDRAW
- PageMaker
- Visual Basic
- Java
- HTML & J Scripts
- Pascal
- C/C++

விண்ணப்பப்படிவங்களுக்கும், பதிவுகளுக்கும் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்

வாரநாள் வகுப்புக்கள் ஆரம்பம் : 18/06/2010
வாரஇறுதி வகுப்புக்கள் ஆரம்பம் : 19/06/2010

சகல கற்கை நெறிகளுக்குமான பதிவுக் கட்டணம் : 250/-

*G-TEC Computer Education*

சர்வதேச புகழ் பெற்ற G-TEC கணனி நிறுவனத்தின் கற்கை நெறிகளை தகவல் தொழில் நுட்ப பூங்கா ஊடாக முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தகவல் தொழில் நுட்ப பூங்காவில் ஏற்கனவே கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு எம்மால் வழங்கப்படும் அரச சான்றிதழுக்கு மேலதிகமாக சர்வதேச தரம் வாய்ந்த சான்றிதழ் ஒன்றையும் பெற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதால் இது தொடர்பான தங்களது பதிவுகளை அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.மேலதிக விபரங்கள் நேரில் அறியத்தரப்படும்.

**Centre for Information Technology**
*-Executive Officer*





**கலைமகள் அழகு நிலா**
பயிற்சி நிலையம்

ஏழு நாட்கள் பயிற்சிகள் இடம்பெற்று பயிற்சியின் நிறைவில் தரமான சான்றிதழ் வழங் கப்படும். இப் பயிற்சியின் மூலம் ஒரு அழகு நிலையம் நடாத்தும் திறமையைப் பெற் றுக் கொள்ளலாம். இப் பயிற்சி கற்றுக் கொள்வது இலகுவானதும் அதிக வருமானம் தரக் கூடிய தொழிலாகும். பெண்களுக்கு மிக அவசியமானது. வயதெல்லை கிடையாது. கீழ் வரும் பயிற்சிகள் அனைத்தும் செயன்முறையாகும்.

பயிற்சிகள்

- ★ Facial (ஏழு வகை)
- ★ Threading
- ★ Pimple Treatment
- ★ Waxing
- ★ Hair Stratening (2 வகை)
- ★ Hair Perming (2 வகை)
- ★ Hot oil Massage
- ★ Hair Cutting
- ★ Hair dye
- ★ Hair Colouring
- ★ Pedeicure Manicure
- ★ கறுப்புக் காயங்கள் இயந்திரம் மூலம் அகற்றப்படும்
- ★ Bleaching
- ★ Bridal make up (5 வகை)

தொடர்புகள்: 077 3719071 021 4908151

பயிற்சிக் கட்டணம்:- 4000/=
பயிற்சி ஆரம்பம் :- 10/06/2010
பயிற்சி நேரம் :- 9 மணி - பி.ப.4 மணி வரை

**கலைமகள் அழகுநிலா**
390, பிரதான வீதி,பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.
(1639)



**CERTIFICATE COURSE IN OFF-SET PRINTING**

அச்சகத்தில் தொழில்புரிபவர்களுக்கும் பாடசாலைக் கல்வியை முடித்தவர்களுக்கும் செயன்முறை விளக்கங்களுடன் அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் யாழ்.நகரில் முதன் முறையாக அச்சகத் தொழில் சம்பந்தமான பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படுகின்றது.

பயிற்சி நெறிகளில் சேர விரும்புபவர்கள் விபரங்களை வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை 9.00am to 4.00pm சனிக்கிழமைகளில் 9.00am to 12.30 pm)

**82/13, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**தொ.பே. 021 222 1388**

என்ற முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு:- ஒரு வகுப்பில் 10 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.
(1618)


## பிரி.பாது...

ஜி.எல்.பீரிஸ், பிரித்தானிய பாது காப்புச் செயலாளருக்கு விளக்க மளித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் செயலாளர் பான் கீ மூன் மற்றும் அமெரிக்கா வின் ராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்ரன் ஆகியோரு டன் நடத்திய சந்திப்புக்கள் தொடர் பிலும் அமைச்சர் பீரிஸ் விளக்க மளித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக் கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உள்நாட்டு ரீதியான விசாரணைகளை நடத்தப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை அமைச்சர் பீரிஸ் வலியுறுத்தியுள் ளார்.

இந்த விவகாரத்தில் வெளிச் சக் திகள் தலையீடு செய்ய அனுமதிக் கப் போவதில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நிரந்தர சமாதானத் தை எட்டுவ தற்கும்,பொருளாதார அபிவிருத்தி யை ஏற்படுத்துவதற்கும் பிரித்தா னியா தொடர்ச்சியாக ஆதரவினை வழங்கும் என அவர் குறிப்பிட்டுள் ளார்.. (ச–5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.